# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் - 47
விலை ரூபாய் 20.00

தீபம்-47 | மாசி இதழ் - 2018,
ஆரம்பம் 15 மாசி - 2013

திருமறைக்கல்வி நடுநிலையம்,
இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை.



E-mail : catetcota@gmail.com
T.P : 026 2221022, 026 3202532


## ஆண்டவரே உமது வழியை எனக்கு கற்பியும் (தி.பா 86 : 11)

## ஆயரின் செய்தி




இறை இயேசுவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே,
ஆண்டவர் இயேசுவில் இனிய வாழ்த்துக்கள்!

புதுவருடத்தை ஆரம்பித்து ஒரு மாதம் கடந்து பெப்ரவரி மாதத்தினுள் நாம் பயணிக்கின்றோம். இம்மாதம் இரு முக்கிய நிகழ்வுகள். பெப்ரவரி 04ம் திகதி இலங்கையின் சுதந்திர தினம் சிறப்பிக்கப்பட்டது. இலங்கை மாதா பெருவிழா. 1948ம் ஆண்டு பிரித்தானியாவின் ஆட்சியிலிருந்து இலங்கை சுதந்திரம் பெற்றாலும், 30 வருட யுத்த காலத்திலிருந்து எம் நாடு மீண்டெழுந்தாலும் இலங்கைத்தீவு இன்னும் சமத்துவமும் சகோதரத்துவமும் நிறைந்த சுதந்திரத்தைத் தேடிக் கொண்டே இருக்கிறது. இந்த சுதந்திரம் வெளியேயிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றல்ல. மாறாக எமக்குள் நாமே உருவாக்க வேண்டிய, கட்டியெழுப்ப வேண்டிய ஒன்றாகும். ஆனால். நடப்பதென்ன? இனவாதம், மதவாதம். வாதம் எனும் நோயினால் முடங்கிப் போயுள்ளது எம் நாடு.

தேர்தல் வந்தது. தேர்தலில் எப்படியாவது வெல்ல வேண்டும் என்பதற்காக மனிதப் பண்பு, சமய விழுமியங்கள், சகோதரத்துவம், சமத்துவத்தைக் கடந்து துவேஷத்தைக் கக்கியவர்கள் இருக்கிறார்கள். இவர்களை நாம் இனங்கண்டு விலகி நிற்பது எமக்கே நல்லது. பெப்ரவரி 14 முதல் திருநீற்றுப்புதன் அதுமுதல் நாம் தவக்காலத்தினுள் நுழைந்தோம். பொதுவாக எமது திருவழிபாட்டு ஆண்டில் திருவருகைக்காலம், கிறிஸ்து பிறப்புக் காலம், தவக்காலம், பாஸ்கா காலம், பொதுக் காலம் என பல காலங்கள் அமைந்திருந்தாலும் கிறிஸ்து பிறப்புக் காலமும் தவக்காலமுமே அதிக செயற்பாடுகள் அடக்கிய காலம் எனலாம். அதிலும் கிறிஸ்து பிறப்புக் காலம் ஆடம்பரத்தோடும், கொண்டாட்டங்களோடும் சில நாட்களுக்குள் முடிந்து விடும்....

தொடர்ச்சி 02ம் பக்கத்தில்.........

## மறையாசிரியர்களுக்கான ஒன்றுகூடல்





தொடர்ச்சி 03ம் பக்கத்தில்...

## இயேசுவோடு

### 12 மணி நேரம் விசேட நற்கருணை ஆராதனை

இடம் :
தூய அந்தோனியார் ஆலயம்,
சீனன்குடா.

காலம் :
10 பெப்ரவரி 2018
(சனிக்கிழமை),

நேரம் :
மதியம் 12 மணி முதல்
இரவு 12 12 மணி வரை



## 24 மணி நேரம் நற்கருணை ஆராதனை

### மார்ச் - 02

மறைமாவட்டத்திலுள்ள
அனைத்துப் பங்குகளிலும்

திருகோணமலை மறைமாவட்டத் திருச்சபையாக
செபத்தில் இணைந்திடுவோம்

## மாபெரும் புதுப்பித்தல் தியானம்

125ம் வருட மறைமாவட்ட ஜுபிலி ஆண்டில்
மாபெரும் புதுப்பித்தல் தியானம்

125th Diocesan Jubilee Year
**Grand Renewal Mission**

காலம் - Dates: 25.02.2018 - 11.03.2018

இடம்: புனித மரியாள் பேராலயம், திருகோணமலை
Venue: St. Mary's Cathedral, Trincomalee


வழிநடத்துபவர்கள் - Animators
அமல மரித்தியாகிகள் துறவற சபையினர் (அமதி)
Oblates of Mary Immaculate (OMI)

04ம் பக்கத்தில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டவரே பேறுபெற்றவர் (தி.பா 01: 01 - 03)

# உங்களோடு பேசுகிறேன்..



Fr .Nc . அருள்வரதன்

புதிய வருடத்தின் இரண்டாவது மாதம். இம்மாதத்திலும் உங்களோடு பேசுவதற்கு ஒரு வாய்ப்பு. பெருமகிழ்வையே தருகின்றது.

இம்மாதத்திலும் முக்கிய நிகழ்வுகள். ஆன்மீக நிலைகளை நோக்கும் போது இம்மாதம் 02 ஆண்டவரைக் காணிக்கையாக ஒப்புக் கொடுத்த நாளைக் கொண்டாடுகின்றோம். 11ம் திகதி தூய லூர்து அன்னையின் விழாவைக் கொண்டாடுகின்றோம். 14ம் திகதி திருநீற்றுப்புதன் தபசு காலம் ஆரம்பமாகிறது. 22ம் திகதி தூய பேதுருவின் விழாவைக் கொண்டாடுகின்றோம். இவ்விழாக்கள் நமக்குப் பல உண்மைகளையும் உறுதிப்பாடுகளையும் தருகின்றன. இறை நம்பிக்கையை மனங்களில் ஏற்று வளர்த்து நற்பலன்களைக் கண்டடைவோம்.

இம்மாதம் 4ம் திகதி இலங்கையின் சுதந்திர தினம். இலங்கை மாதாவின் நாளாகும். அதேவேளை கண்டி தேசிய குருமடத்தின் விழாவாகும். நாட்டிலே உண்மையான சுதந்திரத்தை அனைத்து மக்களும் உணரவும் கண்டடையவும் இலங்கை மாதாவிடம் வேண்டி நிற்பதோடு தேசிய குருமடம் தனது பணியிலே இன்னும் மேலோங்க இறைவனை வேண்டுவோம்.

ஆன்மீக வழிகளிலே 12 மணி ஆராதனை சீனக்குடா பங்கிலே இம்மாதம் 10ம் திகதி இடம்பெறுகின்றது. கலந்து கொள்வோம். பலன்களை உணர்வோம். இம்மாதம் 04 அலஸ்தோட்டம் குழந்தை இயேசு ஆலயமும் 11ம் திகதி உவர்மலை குழந்தை இயேசு ஆலயமும் தமது ஆலய விழாவினைக் கொண்டாடுகின்றார்கள். இறை ஆசீருடன் கூடிய நல்வாழ்த்துக்கள்.

13ம் திகதி இந்து மக்கள் சிவராத்திரி பெருவிழாவைக் கொண்டாடுகின்றார்கள். எங்கும் ஆன்மீகம் வளர்ந்தோங்க வேண்டி நிற்போம். இம்மாதம் 28 தேசிய அறிவியல் தினமாகும். அறிவின் ஆற்றலும் மேம்பாடும் மேலோங்கும் போது தான் உயர்வின் நிலைகளை நாம் கண்டடைய முடியும். 'கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு' என்பதை மனதிற்கொண்டு கல்வியினது வளங்களை கூட்டி நிற்போம்.

நாட்டின் அரசியலை நோக்கும் போது மிகவும் காரசாரமான வார்த்தைகள் கொட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன. தேர்தல் நடைபெறப்போகிறது. எப்படி ஆட்சியைக் காப்பது? எப்படி ஆட்சியை மாற்றிக் கைப்பற்றுவது? இதையே மையப் பொருளாகக் கொண்டு ஆட்சியாளர்களும் எதிரணியினரும் செயற்படுகின்றார்கள் அமைதி குலையாமல் நீதியை மக்கள் காண அனைத்து செயற்பாடுகளும் அமைய வேண்டுமென இறைவனை வேண்டி நிற்போம்.

இம்மாதத்திலே நமது மறைமாவட்டத்தில் பணியாற்றி மறைந்து போன குருக்களை நினைத்து அவர்களுக்காக அவர்களது ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனை வேண்டுவோம்.

இறுதியாக இம்மாதம் அனைவருக்கும் நல்லதொரு மாதமாக அமைய இறைவனை வேண்டி மீண்டும் உங்களோடு பேசுவேன் எனக் கூறி நிற்கின்றேன்.

ஆனால் தவக்காலம் எமக்கு சவால் விடுக்கும், பாவ வாழ்வைத் திரும்பிப் பார்க்க வைக்கும், எமது மனசாட்சியை உலுப்பும் புதுவாழ்வுக்கு இட்டுச் செல்லும் காலமாக அமைந்துள்ளது. இது 46 நாட்களைக் கொண்டுள்ள நீண்ட காலமாகவும் அமைந்துள்ளது. நாம் தனித்துக் குடும்பமாக, பங்குச் சமூகமாக மறைமாவட்ட குடும்பமாக பல பக்தி ஒப்புரவு சடங்குகளிலும், வழிபாடுகளிலும் ஈடுபடுகின்றோம். எனவே இக்காலத்தை நாம் முழுமையாக எமது ஆன்மீக வளர்ச்சிக்காகவும் பயன்படுத்த வேண்டும்.

தவக்காலம் அருளின் காலம். எம்மை இறைவனோடும் அடுத்திருப்பவரோடும் இணைக்கும் காலம். இக்காலத்தில் நாம் பல்வகையான பக்தி முயற்சிகளில் ஈடுபடுகின்றோம். நோன்பு, செபம், இரக்கச் செயல்கள், சிலுவைப்பாதைத் தியானம், தவக்காலத் தியானம், திருப்பலி, ஒப்புரவு அருட்சாதனம், 24 மணிநேர நற்கருணை ஆராதனை, ஆன்மீக வழிகாட்டல்கள், திருயாத்திரை, மாமிச தவிர்ப்பு. புனித வார திருச்சடங்குகள் என பல பக்தி முயற்சிகள். இவற்றை நாம் முறையாகப் பயன்படுத்தி எமது ஆன்மீக வாழ்வைப் புதுப்பிக்க வேண்டும். யோனா நூலில் நாம் வாசிக்கும் நினிவே மக்களின் மனமாற்றமும், லூக்கா நற்செய்தி 15ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கும் காணாமற்போன மகனின் உவமையும் எமக்கு சிறந்த உதாரணம். யோனாவின் செய்தியைக் கேட்டதும் மக்கள் செயல்பட்டார்கள். 'இன்னும் நாற்பது நாளில் நினிவே அழிக்கப்படும்' என்பதே யோனா முழங்கிய இறைவனின் செய்தி. அரசன் முதல் கால்நடை வரை அனைவரும் செயல்பட்டார்கள். ' மனமாற்றம் என்பது உடனடியானது, முழுமையானது, நிரந்தரமானது '. இவர்களது எதிர்பார்ப்பையும் நாங்கள் மனதில் இருத்த வேண்டும். ' இவ்வாறு செய்தால் கடவுள் ஒருவேளை தம் மனத்தை மாற்றிக் கொள்வார். அவரது கடுஞ்சினமும் தணியும். நமக்கு அழிவு வராது'. தூய மனதோடு செயல்பட்டவர்களுக்கு வெற்றியும் கிடைத்தது.

காணாமற்போன மகன் உவமை மூலமாக இயேசு இறைதந்தையின் அன்பையும் இரக்கத்தையும் காட்டுகின்றார். இளையமகன் வீட்டைவிட்டு வெளியே சென்றான். மூத்தவனோ வீட்டினுள் இருந்தாலும் அவனும் தனது மனநிலையால் வெளியேதான் நின்றான் எனலாம். இளையவன் உணர்ந்த போது திரும்பித் தந்தையிடம் வரத் தயங்கினாலும் துணிந்து நம்பிக்கையோடு வந்தான். தந்தையின் அன்பை அனுபவித்தான். மூத்த மகனோ பொறாமைப்பட்டு வீட்டினுள் வர மறுத்தான். தந்தை அவனிடம் வந்து தெளிவுபடுத்தி மூத்தவனையும் அழைத்தார். ' உன் தம்பி இவன் இறந்து போயிருந்தான். மீண்டும் உயிர்பெற்றுள்ளான். காணாமற் போயிருந்தான். மீண்டும் கிடைத்துள்ளான். நாமும் தவக்காலத்தைப் பயன்படுத்தி புதுவாழ்வு பெறுவோம். மனம் மாறிய மக்களாக வாழ்ந்துகாட்டுவோம். தவக்காலம் புனிதம் நிறைந்த காலமாக அமைய நாம் முயற்சித்து அடுத்தவருக்கும் உதவிடுவோம். இக்காலம் இறைவனின் ஆசிரை நிறைவாகப் பெற்றுத்தரும் காலமாக அமைய உங்களை வாழ்த்துகின்றேன்.

இறையாசீரும் இறைவழிகாட்டலும் எப்போதும் உங்களோடு இருப்பதாக!

கிறிஸ்துவில் என்றும் உங்கள் மேல் பற்றுள்ள,
பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்
திருகோணமலை மறைமாவட்ட ஆயர்

## குட்டிக்கதை

Fr .Nc



இரண்டு வீட்டைச் சேர்ந்த இரு குடும்பத்தினர். இரு குடும்பமும் நீண்ட காலமாக உறவுகளேதுமின்றி பிரிந்திருக்கின்றனர். எப்போதும் சண்டையும் ஆரவாரமும் தான்.

அன்று ஒரு வீட்டைச் சேர்ந்த கணவன், மனைவி, மகள் மூவரும் மற்ற வீட்டிற்குப் போய் வீட்டிலே இருக்கிறார்கள். திடீரென்று வந்திருக்கும் இவர்களைக் கண்டபோது மற்ற வீட்டுத்தலைவி கேட்டாள், " என்ன சண்டைக்கு வந்த மாதிரி இருக்கு"

அதற்கு வந்த வீட்டுத்தலைவி சொன்னார், " ஐயோ அப்படிச் சொல்லாதைங்கோ, நாங்க இப்பதான் பூசைக்குப் போய் வாறோம். இன்டைக்கு விபூதிப் புதன், மன்னிப்போம் மறப்போம். நாங்க செய்த பிழைகளை மன்னியுங்க.

அதற்கு வீட்டுத்தலைவி சொன்னார், ஐயோ பெரிய வார்த்தை எல்லாம் வேண்டாம். எங்களுக்குப் பெரும் சந்தோசம் தான். இனி நாம ஒற்றமையாக இருப்போம். இருவீட்டாரும ஒருவரை ஒருவர் அணைத்து அன்பு முத்தம் செய்கின்றனர். மன்னிப்போம் மறப்போம் என்பது அவர்களின் வாழ்விலே புதுவாழ்வைத் தோற்றவித்திருப்பது உண்மைதானே!

# திருப்பாலத்துவ சபை சிறப்புத் திருப்பலி அறிக்கை

**இடம் : திருஇருதய ஆண்டவர் ஆலயம், இருதயபுரம்.**
**பங்கேற்ற சபைகள் : மூதூர், சகாயபுரம், இருதயபுரம்.**
**திகதி : 28.01.2018**

அன்று திருப்பாலத்துவ சபை ஞாயிறை திருகோணமலை திருப்பாலத்துவ சபை இயக்குனர் அருட்பணி.எஸ்.எஸ். ஜோன்பிள்ளை அடிகளார் தலைமையிலும் அவரோடு இணைந்து நிர்வாக சபை உறுப்பினர்களும் மூதூர் மற்றும் இருதயபுர பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், சகாயபுரம் மற்றும் இருதயபுரத்தைச் சேர்ந்த ஊக்குனர்கள், திருப்பாலத்துவ ஊக்குனர்கள், திருப்பாலத்துவ சபை சிறார்கள் அனைவரும் ஒன்றிணைந்து திருஇருதய ஆண்டவர் ஆலயத்தில் ஞாயிற்றுக்கிழமை திருப்பலியை ஒப்புக் கொடுத்தனர். திருப்பலி முடிந்ததும் பிள்ளைகளுக்கான காலை உணவு வழங்கப்பட்டு தொடர்ந்து பிள்ளைகளை மகிழ்விக்கும் வண்ணம் நிர்வாக சபை உறுப்பினர்கள் விளையாட்டுக்களை நடத்தி பரிசுகளையும் வழங்கினர். மேலும் மூதூர் தூய அந்தோனியார் ஆலய திருப்பாலத்துவ சபைக் கூட்டம் எவ்வாறு நடத்தப்படுகின்றது என்பதை நடத்திக் காட்டினர். பின் 11.30 மணியளவில் நிகழ்வுகள் நிறைவுற்று குழந்தைகள் வீடு திரும்பினர்.

நன்றி

**தகவல் : அருட்பணி. அலெக்ஸ் செல்லையா OFM**

புகைப்படம் 12ம் பக்கத்தில்...............



# ஞானப் பெற்றோர்

அன்பென்னும் கரத்திலே
அரவணைப்பைத் தொடுத்த
தாய் தந்தையருடன் ~ இத்
தரணியில் கை கோர்த்த
எமதருமை ஞானப் பெற்றோரே

தாய் தந்தை பாசத்துடன்
கருணை என்னும் காகிதத்தை
எம்மில் பொறித்து ~ காலம்
சொல்லும் பதிலுக்காய் கை கோர்த்து
வேண்டுகின்றீர் எதிர்காலத்தில்
நல்லெண்ணம் எம்மில் உதித்திடவே

இறைவனை அறிந்திட
இனிய நல் அறிவுரையும்
இயல்புடன் வாழ்ந்திட
என்றும் தன் நம்பிக்கையும்

இத்தரணியில் ஞான ஆசானாய்
ஆண்டவன் எமக்களித்த அருங்கொடையே
அகிலம் போற்றிட ஆசிக்கின்றோம் ~ என்றுமே
நன்றியுள்ள பிள்ளையாய்

வெ. ஜனதக்ஷன்
தரம் ~ 06
இருயதபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் - 11

# நல்லாசிரியர்: ஆளுமையும் ஆன்மீகமும்



## ஆசிரியர் : கற்றுக்கொள்பவர்

**அருட்தந்தை எஸ். அன்ரனி பொன்சியன் அமதி (BTh,B.A. (Hons), PGDE, MEd)**

ஆசிரியர் ஒவ்வொருவரும் மனிதர் என்பதை நாம் மறக்கலாகாது. அவர் ஓர் ஒலிப்பதிவுப் பெட்டியல்ல. ஒலிப்பதிவுப் பெட்டி தன்னில் பதிவு செய்யப்பட்டிருப்பதை திருப்பி ஒப்புவிக்கும் கருவியாகும். நல்ல ஆசிரியர் இதை விட மேலான செயற்பாட்டைக் கொண்டவர்.

அறிவு என்பது புள்ளி விபரங்கள் அல்ல. ஒவ்வொரு பாடத்திலும், ஒவ்வொரு வருடமும் புதிய அறிவியல் விடயங்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன. தங்கள் பாடத்துறையில் அண்மையில் வெளிவந்த கட்டுரைகள். பத்திரிகைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் என்பவற்றை ஆசிரியர் வாசித்தறிந்து பெறவேண்டிய அறிவைப் பெற்று தன்னை இற்றைப்படுத்திக் கொள்ள வேண்டும். தனது அறிவை இற்றைப்படுத்தும் ஆசிரியரால் தான் மாணவர்களின் அறிவையும் இற்றைப்படுத்திக் கொள்ள முடியும். ' ஆறிய சோறு பழஞ்சோறு' எனத் தமிழில் முதுமொழியொன்று உண்டு.

கற்பித்தல் நுட்பங்கள் நாளுக்கு நாள் முன்னேற்றமடைந்து கொண்டே செல்கின்றன. தனது துறைசார் அறிவை இற்றைப்படுத்தும் அதேவேளை, நவீன கற்பித்தல் நுட்பங்களை அறிந்து கொள்ளும் ஆசிரியரே கற்றுக் கொண்டிருக்கும் ஆசிரியராவார். அனேக ஆசிரியர்களால் கவனத்திற் கொள்ளப்படாத கற்பித்தலின் முக்கியமான அம்சம் என்னவெனில் நல்லாசிரியரொருவர் தனது மாணவர்களிடமிருந்து கற்றக்கொள்ளும் தாழ்மையான மனநிலையைக் கொண்டிருப்பார். கற்பிக்கப்படும் பாடத்தில் இருந்து மட்டும் அதிகம் கற்றுக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் மாணவர்களுக்குக் கிடைப்பதில்லை. இருப்பினும் நல்லாசிரியர் ஒருவர் குறிப்பிட்ட பாடத்தில் அல்லது விடயத்தில் மாணவர்களின் கருத்துக்களையும் பணிவுடன் அறிந்து கொள்வதில் ஆர்வமாக இருப்பார். மாணவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளும் ஆசிரியரே கற்றுக் கொண்டிருக்கும் ஆசிரியராவார்.


" A Teacher can truly teach unless he is still learning himself.
A lamp can never light another lamp unless it continues to burn its own flame."
- Tagore

## கிறிஸ்மஸ் சிறப்புப்போட்டி முடிவுகள்

**மண்ணிலே மலர்ந்ததே மகிமை....... FR. NC**

சரியான கவிதை வரிகள் .

- கொட்டும் பனியும் மழையுடனே
- கோரக்குளிரின் காலமுமாய்
- வறுமையின் வடிவம் தனையேற்று
- ஏழ்மையின் வடிவிலே இறைமகனார்
- மாடடை குடிசையில் தோன்றியவர்
- மாமரி மகனாய் அவதரித்தாரே
- வானவர் கீதங்கள் பாடிடவே
- வானிலே தோன்றிய தாரகை கண்டே
- ஞானிகள் மூவரும் வந்தங்கே
- வாழ்த்தியே மகிழ்ந்து செல்கின்றார்
- கண்ட காட்சிகள் மனங்களை நிறைத்திட
- மண்ணிலே மகிமை மலர்ந்து நின்றதே





பங்குபற்றியோர் : 10 பேர்
சரியாக வடிவமைத்தோர் : 02 பேர்

**பரிசுக்குரியவர்கள்**

| | |
|---|---|
| 1ம் பரிசு 500/- | 2ம் பரிசு 500/- |
| தே.சமில்டன், | செல்வி. புளோரிடா ஜேசுதாஸ் |
| 3ம் வட்டாரம், | தூய மரியாள் பேராலயம், |
| நிலாவெளி | திருகோணமலை |

- வெற்றியாளர்கள்
- இருவர் மட்டும் பரிசை பெறுகின்றனர்.

பங்குகொண்ட அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்

## அன்பின் பாதையிலே.......

**அருட்பணி. NC அருள்வரதன்**

துன்புறும் மக்களை
கண்டும் காணாமல்
ஒதுங்கிச் செல்வது
நீதிக்குப் புறம்பானதாகும்

பசியாய் இருந்தேன்
உண்ணத் தந்தாய்
தாகமாய் இருந்தேன்
பருகத் தந்தாய்

நோயுற்றிருந்தேன்
பார்க்க வந்தாய் என
இயேசு கூறிய
வார்த்தைகளை
இரை மீட்டிப் பார்ப்பபோம்
பசியோ தாகமோ
எதுவென்றாலும்
யாரென்று பாராது
துன்பங்களுக்கதவும் போது
அவைகளை நாம்
இயேசுவுக்கே செய்கிறோம்



வீதியில்
அடிபட்டுக் கிடந்த மனிதன்
குரு கண்டார்
விலகிச் சென்றார்
லேவியர் கண்டும்
ஒதுங்கிச் சென்றார் ஆனால்
சமாரியன் கண்டு உதவினார்
அவர்களிடையே உறவுகள்
இல்லாவிட்டாலும்
மனிதம் இருந்தது அது
மறையாததால் உதவினார்

நாமும் நமக்குள்ளிருக்கும்
பகையோ வெறுப்போ
எதுவென்றாலும் அதை
ஒதுக்கி வைத்துவிட்டு
மனித நேயங்களை
மலரச் செய்யும்போது
அன்பிய வாழ்வங்கே
உருவாகிப் பிரகாசிப்பது
உண்மையாகுமே

## மறையாசிரியர்களுக்கான ஒன்றுகூடல்

2018ம் ஆண்டின் புதிய வருடத்திற்கான மறையாசிரியர் ஒன்றுகூடலானது 27.01.2018 அன்று காலை 10.30 மணியளவில் ஆரம்பமானது. அனைத்துப் பங்குகளிலிருந்தும் மறையாசிரியர்கள் வருகை தந்திருந்தனர்.

இறைவழிபாட்டுடன் ஆரம்பமானது ஒன்றுகூடல். வரவேற்புரையை இயக்குனர் அருட்தந்தை என்.சி. அருள்வரதன் நிகழ்த்தினார். அதன் பின்னர் இவ்வாண்டின் கருப்பொருளான தூய மாற்கு நற்செய்தி, ஞானப்பெற்றோர், அன்பியம் போன்ற தலைப்புக்களில் பங்கு ரீதியில் மறையாசிரியர்களுக்கான செயற்பாடுகள் கொடுக்கப்பட்டது. மிகவும் சிறப்பாக குறுகிய நேர ஆயத்தத்துடன் செய்திருந்தமை வரவேற்கத்தக்கது. அதன் பின் மறையாசிரியர்களுக்கான விளையாட்டுக்கள் வைக்கப்பட்டது. சந்தோசமாக ஒன்றுகூடலில் மறையாசிரியர்கள் கலந்து கொண்டார்கள். மறையாசிரியர்களுக்கான அன்பளிப்பும் வழங்கப்பட்டது. இறுதியாக சகோதர மொழிப் பொறுப்பாளர் அருட்தந்தை எஸ். ஆர். ஜெயரெட்ணம் அவர்களின் நன்றியுரையுடன் நண்பகல் 01.00 மணியளவில் நிகழ்வுகள் யாவும் இனிதே நிறைவுற்றது. இந்நிகழ்வானது தமிழ், சிங்களம், ஆகிய இருமொழிகளிலும் நடைபெற்றது. இவ் ஒன்றுகூடலில் நூற்றுக்கும் அதிகமான மறையாசிரியர்கள் கலந்து கொண்டனர்.

தகவல் : திருமறைக்கல்வி நிலையம்
புகைப்படம் 12ம் பக்கத்தில்............

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பத்தில் பொறுப்புணர்வு

## பிள்ளைகள் மற்றும் திருமணத்தின் மட்டில் நெறிமுறைகளின் பூரணத்துவம்

சென்ற இதழ் தொடர்ச்சி...

அருட். சகோ . எமர்சன் றாகல்
மெய்யியல் பீடம்,
தேசிய குருமடம்

பொறுப்புணர்வு பிள்ளைகளின் நலனின் நிமித்தம் திருமணத்திற்கு ஆதரவாகவும், ஊக்கமளிப்பதாகவும் விளங்குகிறது. மேலும் பொறுப்புணர்வு குடும்ப பிளவுகளையும் மண முறிவுகளையும் குறைக்கும் ஒரு கருவியாகவும் திகழ்கிறது. திருமண உடன்படிக்கையின் போது கொடுக்கப்படுகின்ற வாக்குறுதிக்கேற்ப இப் பொறுப்புணர்வு பிள்ளைகள் மத்தியிலும், குடும்பத்தில் மற்ற உறுப்பினர்கள் மத்தியிலும் பகிர்ந்தளிக்கப்படுகின்றது. தாய், தந்தை, பிள்ளைகள் என குடும்பமாக எப்போது உருவாகின்றார்களோ அப்போது பிள்ளைகள் மீதான பொறுப்புணர்வு மேலும் உறுதியடைகின்றது. பிள்ளைகளுக்கு கல்வி புகட்டவும், சிறந்த கிறிஸ்தவர்களாக உருவாக்கவும் பொறுப்புடையவர்களாக பெற்றோர் மாறுகின்றனர். அதேபோல் பிள்ளைகளும் பெற்றோர்களின் பொறுப்புணர்வுக்கு மதிப்பளிப்பவர்களாக. கீழ்ப்படிபவர்களாக மாறுகின்றனர். இவையனைத்துக்கும் சிறந்த உதாரணத்தை நாம் திருமுழுக்கு அருட்சாதனத்தில் காணலாம். கைக்குழந்தைகளாக இருக்கின்ற தங்கள் பிள்ளைகளின் நிமித்தம் பெற்றோர், ஞானப்பெற்றோர் பொறுப்பேற்பவர்களாக இறைவனுக்கும் திருச்சபைக்கும் முன்னிலையில் வாக்குறுதி கொடுப்பதை நாம் காணலாம். இதன்போது கொடுக்கப்படுகின்ற வாக்குறுதி சுய விருப்பத்திற்கு முரணானது அல்ல.

பொறுப்புணர்வு இயற்கையாக எம்மில் வளர்ந்ததொன்றல்ல. பல அனுபவங்கள், சவால்கள், பயிற்சிகள் ஆகியவற்றின் பின்னனியில் எம்மில் வளர்ந்தது. எனவே பொறுப்புணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொடுப்பது குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருடைய கடமையாகும். விசேடமாக பெற்றோர், பெரியவர்களின் கடமையாகும். சில குடும்பங்களில் ஊதாரிகளாக இருக்கும் பிள்ளைகள் தோன்றுவதற்கு மிக முக்கிய காரணம் இப் பொறுப்புணர்வு எனும் பண்பை இல்லங்களில் வளர்க்காமையே ஆகும்.

குடும்பமொன்றின் பொறுப்புணர்வு பற்றி ஆராய்கையில் 'தார்மீக பொறுப்பு' ( Moral Responsibility) பற்றிய தெளிவை நாம் அடைந்து கொள்ள வேண்டும். தார்மீக பொறுப்பு என்பது கிறிஸ்தவர்களாகிய எமக்கு புதியதோர் வழிமுறையல்ல. இயேசுவின் படிப்பினைகளின் ஒரு சிறிய தொகுப்பு எனக்கூறலாம். ' நான் பசியாய் இருந்தேன் நீங்கள் உணவு கொடுத்தீர்கள், தாகமாய் இருந்தேன், என் தாகத்தை தணித்தீர்கள், அந்நியனாய் இருந்தேன், என்னை ஏற்றுக் கொண்டீர்கள், நான் ஆடையின்றி இருந்தேன். எனக்கு ஆடை அணிவித்தீர்கள். நோயுற்றிருந்தேன் என்னை கவனித்துக் கொண்டீர்கள். சிறையில் இருந்தேன் என்னைத் தேடி வந்தீர்கள்....... மிகச் சிறியோராகிய என் சகோதர சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் ( மத்தேயு 25: 35-36) என்கின்ற இறைவார்த்தையை கேட்டிருக்கிறோம். கிறிஸ்தவ விழுமிய கோட்பாட்டிற்கேற்ப தோன்றுமிடத்து அத்தேவையை நிறைவேற்றுவது கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவருடைய 'தார்மீக பொறப்பாகும்'

சில குடும்பங்களில் உதவி தேவைப்படும் சந்தர்ப்பங்கள், மனம் சோர்வுற்ற சந்தர்ப்பங்கள், மனமுடைந்த சந்தர்ப்பங்கள், தனிமையில் உணர்கின்ற சந்ததர்ப்பங்கள், பெலவீனமான சந்தர்ப்பங்கள், நோயுற்ற சந்தர்ப்பங்கள் என பல சந்தர்ப்பங்களை குடும்ப அங்கத்தவர்கள் எதிர்நோக்குகின்றனர். அவ்வாறான வேளைகளில் மனமுவந்து துணைநிற்பது தார்மீக பொறுப்பாகும். பெற்றோர் பிள்ளைகளை வளர்த்தெடுப்பதில் எவ்வாறு பொறுப்புள்ளவர்களாய் இருக்கின்றனரோ அவ்வாறே வயது முதிர்ந்த நிலையில் பெற்றோரை பிள்ளைகள் கவனித்துக் கொள்வது தார்மீக பொறுப்பாகும்.

தொடரும்.........................

# "எழு! ஒளிவீசு!! (எசா.60:1)

## மாபெரும் புதுப்பித்தல் தியானம்

## தூய மரியாள் பேராலயம், திருகோணமலை

*மாசி 25 - பங்குனி 11, 2018*

## "...ஆண்டவர் இயேசுவின் மீதுகண்களைப் பதியவைப்போம்" (எபி.12:2)

எமது திருகோணமலை மறைமாவட்டம் தன் நம்பிக்கை திருப்பயணத்தில் 125வது மைற்கல்லைபதித்திருக்கும் மகிழ்ச்சியானதருணத்தில், தூய மரியாள் பேராலய இறைமக்கள் சமூகமும் இணைந்துக்கொள்கின்றது. ஏனெனில் ஒருமறைமாவட்டம் உருவாகும்போதுஅதன் மணிமுடியாகபே-ராலயம் ஒன்றும் உருவாகின்றது. அந்தவகையில் தூய ஆரோகண அன்னையை பாதுகாவலியாக கொண்ட பேராலயம் நம்பிக்கை என்னும் விதையை வளர்த்தெடுத்து, இறையாட்சியின் விழுமியங்களை கொண்டு நல்லதொரு சமூகத்தைக் கட்டியெழுப்பும் பாரிய பணியை ஆற்றியதில் பாதம் பதித்தவர்களையும், நிகழ்வுகளையும் மீட்டிப்பார்க்கும் அருமையான சந்தர்ப்பமாக இதை கருதுகின்றோம்.

இந்த வரலாற்று சிறப்புமிக்க தருணத்தில், எமது நம்பிக்கையை புதுப்பித்து, இனிவரும் சந்தியினருக்கு எடுத்துச் செல்லும் பாரிய பொறுப்பை நாம் பெற்றிருக்கின்றோம். இதை உணர்ந்து ஓர் ஆன்மீக புதுப்பித்தல் தியானத்தை புனித மரியாள் பேராலய பங்கு இறைசமூகமாக முன்னெடுத்திருக்கின்றோம். மாசி மாதம் 25 தொடங்கி பங்குனி மாதம் 11 வரையுள்ள காலப்பகுதியில் வவுனியா அமல மரித்தியாகிகள் துறவற அருட்பணியாளர்கள் ஐவரின் வழிகாட்டலில் இந்த புதுப்பித்தல் தியானம் நடைபெறவுள்ளது. இல்லத் தரிசிப்புடன் ஆரம்பித்து, வலயத் திருப்பலிகளும், சிறப்பு கருத்தரங்குகளும், அருட்சாதன கொண்டாட்டங்களும் இடம்பெறவுள்ளன.

இந்த தெய்வீக செயல்பாடுகள் இறைபாரமரிப்பின் உதவியுடன் சிறப்பாக நடைபெற உங்கள் செபங்களை கேட்டு நிற்கின்றோம்.

தகவல்: பங்குத் தந்தையுடன்,
பங்கு மக்கள்

## அன்பிய வாழ்வு..... Fr . NC

❖ கவிதை வரிகளை
❖ சரியாக வடிவமையுங்கள்
❖ எல்லோரும் கலந்து கொள்ளலாம்
❖ எல்லோரும் சரியாக வடிவமைத்தால்
❖ குலுக்கல் மூலம் பரிசுகள்

❖ இதோ கவிதை வரிகள்

❖ அன்பிய வாழ்வு அங்கே
❖ அகமகிழ்ந்தே உதயமாகும்
❖ பகைமைகள் மறைந்து வாழ்வில்
❖ உறவுகள் மலர வேண்டும்
❖ உதவும் மனநிலைகள் பெருகியே
❖ உதவிகள் செய்து அன்போடு
❖ உறவுகளை வளர்க்கும் போது

❖ சரியாக வடிவமையுங்கள்
1ம் இடம் 500 /-
2ம் இடம் 300 /-
3ம் இடம் 200 /-

முடிவுத்திகதி : 25.03.2018

## மன்னிப்பதில் மகிழ்ந்திரு மகனே மகளே



இயேசு உன்னையும் என்னையும் பார்த்துக் கேட்கின்றார்
உன் பாவங்கள் எல்லாவற்றிக்காகவும்
உனக்காக நான் மரித்தேன்
எனக்காக நீ என்ன செய்தாய்
உன் பாவங்கள் எல்லாவற்றிற்காகவும்
எப்போது நீ மரிப்பாய்
மரித்து மன்னிப்பாயானால் மறுவாழ்வு
உனக்கு உண்டு மறவாதே
மன்னிக்க மறந்து மரணத்தை ஏற்காதே
மண் விதையை ஏற்காவிடில் மரம் ஏது
மண்ணுலகில் நீ கூறு
உன் மரணத்திற்கு முன் மன்னிப்புக் கேட்டு விடு
மன்னிப்பதில் மரணத்திற்கு பின்பும் மறுவாழ்வு
உண்டு மறவாதே மகனே (ளே)
வாழும் காலமதில் நி செய்யம் பாவங்கள்
ஜீவப் புத்தகத்தில் எழுதப்பட்ட போதும்
நாவினால் அறிக்கையிட வேண்டும் மறவாதே பனித்துளியானது
கடலில் விழுந்தால் அது முத்தாகும்
பனித்துளியானது விசச் செடியில் விழுந்தால் அது விசமாகும்
பனித்துளியான நீ விசமாய் மாறி மற்றவர்கள்
உள்ளங்களை காயப்படுத்திய காலங்களுக்காய் மரித்து விடு
முத்தாய் மாறி மன்னிப்பு கேட்டு விடு
இன்றே நம் இயேசு நம்மில் உயிர்த்த நாள்
இநநாளைப் பொன்நாள எனக் கொண்டாட
இன்றே உன் பகைவன் வீடு சென்று விடு
அன்போடு அவனை அணைத்து அன்பு முத்தம் கொடுத்து விடு
கிடைத்து விடும் பரமனின் அன்பு உனக்கு
கொண்டாடு கொண்டாடு மகிழ்ந்து கொண்டாடு

சு.கௌசல்யா,
இல 216/12,
பாலையூற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பின் மகிழ்வு

அருட்தந்தை. ஏ.ஏ. நவரெட்ணம்
முதுநிலை விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை

## திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் திருத்தூது ஊக்கவுரை

## அலகு 3 – இயேசுவை நோக்கி குடும்பத்தின் அழைப்பு



இல 58 – நற்செய்தியின் அடிப்படையாகிய அதன் செய்தி குடும்பங்களிலும், குடும்பங்களுக்கிடையேயும் தொடர்ந்தும் கேட்கப்பட வேண்டும்.

இல 59 – திருமணம் மற்றும் குடும்பம் குறித்த நமது போதனையானது கிறிஸ்து வெளிப்படுத்திய அன்பினாலும், பரிவினாலும் சித்தரிக்கப்பட வேண்டும்.

இல 60 – இவ்வலகு கிறிஸ்துவின் ஒளியில் திருமணம் குறித்த திருச்சபையின் படிப்பினையைச் சுருக்கமாகத் தரவிழைகின்றது.

இல 61 – திருமணம் ஒரு புனித நிறுவனமாகும்.

இல 62 – திருமண திருவருட்சாதனம் பிரிக்கப்படமுடியாத ஒன்றிப்பாகும்.

இல 63 – திருமணம் எனும் திருவருட்சாதனம் மூவொரு இறைவனின் உருவகமாகவும், கிறிஸ்து திருச்சபையுடன் கொண்டுள்ள உறவின் அடையாளமாகவும் திகழ்கின்றது.

இல 64 – குடும்பங்களுக்கு அருட்பணியாற்றுவதற்கு கிறிஸ்து எமக்கு வழிகாட்டியாக இருக்கின்றார்.

இல 65 – கிறிஸ்துவின் மேய்ப்புப்பணியினை சரியாகப் புரிந்துகொள்ள விவிலியத்திலுள்ள எண்ணிலடங்காத பலபகுதிகளை நாம் தியானிக்க வேண்டும்.

இல 66 – திருக்குடும்பமே கத்தோலிக்க குடும்ப வாழ்வின் வழிகாட்டியாகும்.

இல 67 – வத்திக்கான் சங்கத்தின் இன்றைய உலகில் திருச்சபை எனும் ஏடு "திருமணம் சமூக வாழ்வின் அன்பின் அடையாளமென வரைவிலக்கணம் கூறுகின்றது. அவ்வாறே திருச்சபை எனும் கொள்கைத்திரட்டு "குடும்பங்கள் இல்லத் திருச்சபையாக, முழுத் திருச்சபையின் இயல்பினை, பண்பினை வெளிப்படுத்துகின்றது" என்று கூறுகின்றது.

இல 68 – திருத்தந்தை 6ம் பவுல் பொறுப்புவாய்ந்த பெற்றோர் குறித்து வலியுறுத்தும்போது "கணவனும் மனைவியும் குடும்பத்தின் முன்னுரிமைக்கேற்ப அனைத்தையும் ஒழுங்குபடுத்த வேண்டும்" என்கிறார்.

இல 69 – திருத்தந்தை 2ம் யோன் பவுல் "ஆண் பெண் இருவரும் அன்பு செய்ய அழைக்கப்படுகின்றார்கள். இத்திருமண அன்பானது புனிதமானது" என வலியுறுத்துகின்றார்.

இல 70 – திருத்தந்தை 16ம் பெனடிக் "சிலுவையில் சிந்திய கிறிஸ்துவின் தியாக அன்பானது திருமண அன்பின் வழிகாட்டியாகும்" என்கிறார்.

இல 71 – திருமண அருட்சாதனமானது கடவுள் தன்மக்கள் மீது கொண்ட அன்பின் அடையாளகும்.

இல 72 – திருமணம் ஒர் அழைத்தலாகும். அது வெறுமனே சமூக ஒருங்கிணைப்பு மாத்திரமல்ல, மாறாக ஒழுங்கான ஆன்மீக ஆயத்தத்தில் உருவானதாகும்.

இல 73 – திருமணம் குறைவுள்ளதாயினும், அருளடையாளம் வாயிலாக கடவுளின் அருளினால் மாத்திரமேயது கிறிஸ்து தனது மணமகளாகிய திருச்சபைமீது கொண்ட அன்பின் அடையாளமாகத் திகழ முடியும்.

இல 74 – திருமணத்தின் அருள்வரமானது திருமண வாக்குத்தத்தத்தின் உடலியல் வெளிப்பாடாகிய தாம்பத்திய உறவினை புனிதப் படுத்துவதுடன், குடும்ப வாழ்வின் அனைத்து விடயங்களையும் புனிதப்படுத்துகின்றது.

இல 75 – திருமுழுக்குப் பெற்ற ஆணும் பெண்ணும் தங்களது வார்த்தையின் சம்மதத்தாலும் உடல்சார் உறவினாலும் திருமண திருவருட்சாதனத்தின் (அருட்)பணியாளர் ஆகின்றனர்.

இல 76 – திருமண திருவருட்சாதனத்தின் அருளானது காலத்தில் வளரப் பண்ணப்பட வேண்டும்.

இல 77 – உண்மையான இயற்கை முறையிலமைந்த திருமணம் உள்ளபோதிலும், திருமண திருவருட்சாதனமானது திருமணத்தின் முழு வடிவமாகும்.

இல 78 – செல்லுபடியான (valid) முறையில் திருமணம் முடிக்காவிட்டாலும், ஒன்றாகக்கூடி வாழ்கின்ற தம்பதியினரை திருச்சபையானது கிறிஸ்துவைப்போன்று அணுகி, அவர்களுடன் பேசி, அவர்களை செல்லுபடியான திருமண உறவிற்கு கொண்டுவர வேண்டும்.

இல 79 – திருமணத்தின் உண்மையினை ஏற்று வாழ்வதற்கான உதவியினை தம்பதியினருக்கு வழங்குகின்றபோது அருட்பணியாளர்கள் எப்போதும் திருமணத்தின் உண்மையினை கற்பிக்க வேண்டும்.

இல 80 – திருமணத் தம்பதியினர் தங்களது பரஸ்பர அன்பின் கனியாகிய வாழ்வு (புதிய உயிர்) எனும் கொடையினைப்பெற திறந்த மனத்துடன் இருக்க வேண்டும்.

இல 81 – ஒரு குழந்தையானது கணவன் மனைவிக்கிடையில் பிறக்கின்ற தாம்பத்திய உறவில் (Conjugal) உருவாகும் அன்புத் திருமணத்தில் பிறக்க வேண்டும்.

இல 82 – குழந்தைகள் குடும்பத்தில் கொடைகளாக வரவேற்கப்பட வேண்டுமே தவிர, பொருட்களாக வாங்கப்படக்கூடாது.

இல 83 – உயிரானது தாயின் கருவில் உருவானது முதல், இயற்கை மரணம் வரையிலும் பாதுகாக்கப்பட வேண்டும்.

இல 84 – இன்றைய குழந்தைகளின் ஆரம்பக்கல்விக்கு பலதடைகள் உள்ளன. குழந்தைகளின் கல்வி குறித்த பெற்றோரின் முதன்மைக் கடமையினை மதிக்கின்ற அதே வேளையில் திருச்சபையானது அவர்களது கல்விக்கு உதவ வேண்டும்.

இல 85 – "பெற்றோரின் திருமண அழைத்தலின் ஒரு பகுதி பிள்ளைகளை நம்பிக்கை வாழ்வில் வளரச் செய்வதாகும்" என்பதனை பெற்றோர் உணர திருச்சபை உதவ வேண்டும்.


இல 86 – "நற்செய்தியின்படி வாழ்ந்து, கடவுளின் அன்பிற்கு உலகில் சாட்சியம் பகர்கின்ற நம்பிக்கையுள்ள குடும்பங்களுக்கு" திருச்சபை நன்றி கூறுகின்றது.

இல 87 – புதுப்பிக்கப்பட்ட சிந்தனையான குடும்பங்கள் திருச்சபையுடன் கொண்ட உறவானது நாம் வாழும் இக்காலத்தில் புதிய கனியினைப் பெற்றுத்தரும்.

இல 88 – நம்பிக்கையுள்ள குடும்பங்களிலிருந்து பல புதிய கனிகள் பிறக்கும். அவையே திருச்சபைக்கும், சமூகத்திற்கும் அத்தியாவசியமானதாகும்.

(அலகு 4 அடுத்த இதழில் தொடரும்)

# கச்சதீவு திருவிழா: பெப்ரவரி மாதம் 23 மற்றும் 24ம் திகதிகளில்...



வரலாற்று சிறப்புமிக்க கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் 23ஆம், 24ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள நிலையில், இம்முறை இலங்கையில் இருந்து பத்தாயிரம் பக்தர்கள் கலந்துகொள்வார்கள் என தெரிவித்த யாழ் மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் திருவிழாவுக்கான அனைதது ஏற்பாடுகளும் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

கச்சத்தீவு திருவிழாவுக்கான முன்னாயத்தத்தை கலந்துரையாடல் இன்று (09.01.2018) யாழ் மாவட்ட அரச அதிபர் தலைமையில் அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது. அது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கச்சத்தீவில் இம்முறை இரு நாட்டிலிருந்து அதிகளவான பக்தர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது, இந்த முறை இலங்கையிலிருந்து 10 ஆயிரம் பக்தர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகறிது. அதற்கு ஏற்ற வகையில் விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து குறிகட்டுவன் வரையான பேருந்து சேவை அதிகாலை 4:00 மணியில் இருந்து நண்பகல் 1:00 மணிவரை நடைபெறும். அதேபோன்று குறிகட்டுவனில் இருந்து கச்சத்தீவு வரை காலை 5:00 மணிக்கு ஆரம்பித்து, நண்பகல் 2:00 மணிவரை நடைபெறும். படகுச் சேவைக்கான ஒருவழிக் கட்டணமாக 300 ரூபாய் அறவிடப்படவுள்ளது. நெடுந்தீவிலிருந்து கச்சத்தீவுக்கு ஒரு வழிக் கட்டணமாக 225 ரூபாய் அறவிடப்படவுள்ளது. அத்துடன் சேவையில் ஈடுபடும் படகுகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே சேவைக்கு அனுமதிக்கப்படவுள்ளது. பயணிகள் பாதுகாப்பு அங்கி அணியவேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அத்துடன் இம்முறை பொலிஸ் பாதுகாப்பு வசதிகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. 200 பொலிஸார் சேவையில் ஈடுபடவுள்ளனர். பயணிகள் படகு சேவை இடம்பெறும் போது கடற்படை ரோந்து நடவடிக்கைகள் நடைபெறும் என்றார்.

(ஆதாரம்: யெர்மனி ~ தமிழ் ஆன்மீக்ப பணியகத்திற்காக யாழ் நிருபர் சுமித்தி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா பெரிய கோமரசன்குளம் கல்வாரித் திருத்தல தவக்கால வழிபாட்டு ஒழுங்கு முறைகள் -2018

"நான் உங்களுக்கு புதிய இதயத்தை அருள்வேன்" எசே 36:26



**1.திங்கள் முதல் வியாழன் வரை**
காலை 11.30மணி திருப்பலி

**2.வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில்**
காலை 10.00மணி நற்கருணை எழுந்தேற்றம்
காலை 10.30மணி சிலுவைப்பாதை
பி.ப 12.00மணி திருப்பலி
மாலை 3.00 மணி திருமணித்தியாலயம் நற்கருணை

**3.2ம் வெள்ளி (23.02.2018)**
காலை 10.00மணி உயிர்த்த ஆண்டவர் குழுமத்தின் சிறப்பு வழிபாடு
பி.ப 12.00 மணி திருப்பலி

**4.4ம் வெள்ளிபாதயாத்திரை (09.03.2018)**
காலை 5.00 மணி நற்கருணை வழிபாடு, தூய அந்தோனியார் ஆலயம், இறம்பைக்குளம், வவுனியா.
காலை 5.30 அணி மேற்படி ஆலயத்தில் இருந்து பாத யாத்திரை ஆரம்பம்.
காலை 10.00 மணி சிலுவைப்பாதை
காலை 11.00 மணி ஆயர் தலைமையில் கூட்டுத்திருப்பலி




**5.5ம் வெள்ளி குணமாக்கும் வழிபாடு (16.03.2018)**
காலை 9.00 –பி.ப 3.00 மணிவரை

**6.பாடசாலை மாணவர்களுக்கான தியானம் (17.03.2018 சனிக்கிழமை)**
காலை 9.00 –பி.ப01.00 மணிவரைதியானம்

**7.குடும்பங்களுக்கான தியானம் (18.03.2018 ஞாயிற்றுக்கிழமை)**
காலை 10.00 –பி.ப 2.00 மணிவரை

**8.6ம் வெள்ளி வழிபாடுகள் (23.03.2018)**
காலை 8.00 நற்கருணைஎழுந்தேற்றம்
மாலை 3.00 நற்கருணைஆசீர்,சிலுவைப்பாதை

**9.பரிசுத்த வார வழிபாடுகள்**
குருத்தோலை ஞாயிறு (25.03.2018) காலை 11.00 மணி திருப்பலி
புனித வியாழன் (29.03.2018) மாலை 3.00 மணி
புனித வெள்ளி (30.03.2018) மாலை 3.00 மணி
ஆசந்தி வழிபாடு பி.ப 8.00 மணி
புனித சனி வழிபாடு (31.03.2018)
காலை 10.00 மணி~ இயேசுவின் இறுதி வார்தைகள் தியானம்
பி.ப 7.00 மணி~ பாஸ்கா திருவிழிப்பு வழிபாடு
உயிர்ப்பு ஞாயிறு(01.04.2018)திருப்பலி காலை 10.00 மணி




**குறிப்பு:**
**தினமும் பாவசங்கீர்த்தனம் இடம்பெறும்**
**மெழுகுதிரி பவனி, தவக்கால செபமாலைத்தியானம் என்பன இடம்பெறும்.**
**முன்கூட்டிய அறிவித்தலுடன் குறைந்தவிலையில் உணவு வசதி செய்து கொடுக்கப்படும்**

**தொடர்புகளுக்கு :~அருட்பணி. இ. அகஸ்ரின் ~ 0773454250**
**விபரங்களுக்கு :~ Facebook – Calvary komarasankulam**

பரிபாலகர்
கல்வாரித்திருத்தலம்
பெரியகோமரசன்குளம்
வவுனியா.

---

# 52வது சமூகத் தொடர்பு உலக நாள் திருத்தந்தையின் செய்தி



இறைவன் நமக்காக வகுத்துள்ள திட்டத்தின் ஒரு பகுதி, சமூகத் தொடர்பு என்றும், நாம் உடன்பிறந்தோர் என்ற உணர்வைப் பெறுவதற்கு மிக அடிப்படையான வழி தொடர்புகள் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் புதனன்று வெளியிட்டுள்ள செய்தியில் கூறியுள்ளார். இவ்வாண்டு சிறப்பிக்கப்படும் 52வது சமூகத் தொடர்பு உலக நாளுக்கென சனவரி 24, புதனன்று திருத்தந்தை வெளியிட்டுள்ள செய்தி, உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்" (யோவான் 8:32) என்ற தலைப்பையும், "பொய் செய்திகளும், அமைதிக்காக இதழியலும்" என்ற உபதலைப்பையும் கொண்டுள்ளது. மிகத் துரிதமாக மாறிவரும் சமூத் தொடர்புகளும், டிஜிட்டல்" தொழில்நுட்பங்களும், 'பொய்யான செய்திகளை' பரப்பிவருவதைக் காண்கிறோம் என்று இச்செய்தியின் துவக்கத்தில் கவலையை வெளியிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 'பொய்ச் செய்திகள்' என்பதைக் குறித்து நான்கு பகுதிகளில் தன் சிந்தனைகளைப் பகிர்ந்துள்ளார்.

1). 'பொய் செய்திகளில்' உள்ள 'பொய்மை' என்ன?
2). 'பொய் செய்திகளை' எவ்விதம் அடையாளப்படுத்துவது?
3). 'உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்' (யோவான் 8:32),
4). அமைதியே உண்மையான செய்தி

என்ற நான்கு பிரிவுகளில் திருத்தந்தை தன் கருத்துக்களைத் தொகுத்து வழங்கியுள்ளார். உண்மைச் செய்திகளைப் போலவே வேடமிட்டு பொய்ச் செய்திகள், மக்களுக்குப் பழக்கமான முன்சார்பு எண்ணங்களைச் சுமந்து வருவதால், அவை மக்களால் விரும்பி ஏற்கப்படுகிறது என்றும், அதிகாரபூர்வமான மறுப்புக்கள் சொல்லப்பட்டாலும், பொய்யான செய்திகள் மக்களிடையே விரைவில் ஊடுருவிச் செல்கின்றன என்றும் திருத்தந்தை தன் கவலையை வெளியிட்டுள்ளார். சமுதாயத்தில் புழக்கத்தில் இருக்கும் 'டிஜிட்டல்' கருவிகளைப் பயன்படுத்தி, இத்தகையச் செய்திகளை எவ்வித தயக்கமும் இன்றி, மக்கள் பரப்பி வருவதால், பொய்யான செய்திகளின் வேடம் கலைக்கப்படுவதில்லை என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார். பொய்ச் செய்திகளின் வேடத்தைக் கலைப்பது எளிதான செயல் அல்ல என்றாலும், பல கல்விக்கூடங்கள் அத்தகையப் பணியைச் செய்து வருகின்றன என்று தன் செய்தியில் சுட்டிக்காட்டியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உண்மையை உள்ளங்களில் பதிக்கும் கல்வியில் இன்னும் அதிகமான கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று விண்ணப்பித்துள்ளார். உண்மை என்பது ஒருவர் தன் வாழ்வில் தொடர்ந்து தேடிவரும் விடயம் என்பதை, தன் செய்தியில் வலியுறுத்தும் திருத்தந்தை, பொய் எப்போதும் பிளவுகளையும் மோதல்களையும் உருவாக்கி, மக்களைப் பிரிக்கும் என்றும், உண்மை மக்களை ஒருங்கிணைக்கும் என்றும் தெளிவுபடுத்தியுள்ளார். பொய்மையை முறியடிக்க வெறும் செயல் திட்டங்கள் மட்டும் போதாது, மாறாக உண்மையை நோக்கி மக்களை ஒன்றிணைக்க வேண்டும் என்று கூறியுள்ள திருத்தந்தை, சமூகத் தொடர்புகள் இந்த உண்மையில் மக்களை இணைக்கும் பணியைச் செய்யவேண்டும் என்று கூறியுள்ளார். இலாபம் ஈட்டும் நோக்கத்துடன் வெறுப்பையும், வன்முறையையும் வளர்க்கும் சொல்லாடலைப் பயன்படுத்தும் இதழியலுக்கு ஒரு மாற்றாக, உண்மையை, அன்பை பறைசாற்றும் இதழியலை வளர்ப்பது கிறிஸ்தவ சமூகத் தொடர்புக் கலையின் இலக்கணம் என்று திருத்தந்தை பிரான்சிஸ் தன் செய்தியில் வலியுறுத்தியுள்ளார். அமைதியின் கருவியாய் என்னை மாற்றும் என்று அசிசி நகர் புனித பிரான்சிஸ் உருவாக்கிய செபத்தைத் தழுவி, 'எங்கே கத்துதல் உள்ளதோ, அங்கும் கேட்கும் பழக்கத்தை வளர்ப்போம். எங்கே குழப்பம் நிலவுகிறதோ, அங்கே நல்லிணக்கத்தை உருவாக்குவோம்" என்ற வார்த்தைகளில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 52வது சமூகத் தொடர்பு உலக நாளுக்கென வெளியிட்டுள்ள செய்தியின் இறுதியில், ஒரு செபத்தை வடிவமைத்துள்ளார்.

(ஆதாரம்: வத்திக்கான் வானொலி.)

---

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
**24.11.1937**



உதிர்வு
**03.03.2017**

**ஓராண்டும் ஆனதையா – நீர்**
**எம்மை விட்டகன்று**
**ஆனாலும் மாறாதையா – உம்**
**அன்பான நினைவலைகள்**
**இறைஞ்சுகின்றோம் இறைவனிடம்**
**இனிய சாந்தி நீர் பெறவே**
**எந்நாளும் வேண்டுகின்றோம்**
**இறை ஒளியில் வாழ்ந்திடவே**

## அமரர் வீரப்பன் செல்லத்துரை ஜோசேப்

**" உன் பெயரைச் சொல்லி உன்னை அழைத்தேன் , நீ எனக்கு உரியவன் " (எசாயா 43 : 1)**

பிரிவால் நினைந்துருகும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

3ம் கட்டை, நித்தியபுரி,
திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளின் காலம், தவக்காலம்

தவக்காலம், இது ஒரு அருளின் காலம். இறையன்பை உணரவும் அதை அனுபவிக்கவும் கிடைத்த உன்னத சந்தர்ப்பம். கிறிஸ்தவர்கள் நம்மைப் புடம் போட மீண்டும் ஒரு தவக்காலம். கிறிஸ்துவில் வாழவும் அவரில் வளரவும் அன்னையாம் திருச்சபை எமக்குத் தரும் வரப்பிரசாதம்தான் இந்தத் தவக்காலம். மண்ணால் உருவான மனிதன் மண்ணுக்கே திரும்புவான் என்ற பேருண்மையை உணர்ந்தவர்களாக செபம், தபம், இரக்கச், செயல்களினூடாக மனந்திரும்பி நற்செய்தியை நம்பும்படி அழைப்புவிடுக்கும் விபூதிப் புதனுடன் ஆரம்பமாகும் இத்தவக்காலம் நாற்பது நாட்கள் பயணித்து இயேசுவின் பாஸ்காவில் நிறைவடைகின்றது. இயேசுவின் பாடுகள் மரணம், உயிர்ப்பினால் புது வாழ்வை முழு உலகமுமே இலவசமாகப் பெற்றுக்கொள்வதினால் இத் தவக்காலம் ஓர் அருளின் காலமாக மிளிர்கிறது. இத்தவக்காலமானது - இறைவனின் மீட்புத்திட்டத்தை அறியவும் விசுவசிக்கவும் இப்புதிய திருவழிபாட்டுக்காலமானது துணை புரிகின்றது. இறைவனின் மீட்புத் திட்டம் ஏனைய அருட்சாதனங்களினூடாக நாம் அறியக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பினும் இத்தவக்காலமானது மிகவும் சிறப்பானது. இது வெறும் சிந்தனையாகவோ அல்லது வெறும் விழாவாகவோ அல்லாமல் இது ஆட்தன்மையுடையதாகக் காணப்படுகின்றது: அது இயேசுவில் பிரதிபலித்தது - மனுக்குலத்தின் மீட்பிற்கான இறையன்பு இன்று அருட்சாதனங்களினூடாக திருச்சபையில் அடையாளங் காணப்படுகின்றது. வருடம் முழுவதுமான திருவழிப்பாட்டில் இயேசுவின் பாஸ்கா மறைபொருளான பாடுகள் மரணம் உயிர்ப்பு விண்ணேற்பு என்பவற்றை தியானிக்க அழைக்கப்படுகின்றோம். ‘குறோசிமா’ எனப்படும் இத்தவக்காலமானது திருவழிபாட்டில் எப்போது உள்வாங்கப்பட்டது என்பது அறியப்படாத ஒன்று. ஆனால் ஞாயிறு திருவழிபாட்டை கருத்தாகக் கடைபிடித்த ஆரம்ப கால கிறிஸ்தவர்களிடையே இயேசுவின் உயிர்ப்பை நினைவுகூர முக்கிய ஆன்மீகப் பயணமாக மனந்திரும்புதலும் தூய்மைப்படுத்துதலும் காணப்பட்டது.

கி. பி. 2ம் நூற்றாண்டில் இத்தவக்கால முறைமை திருவழிபாட்டில் உள்வாங்கப்பட்டிருக்கலாம் என்பது ஆய்வாளர்களின் கருத்து. கிறிஸ்தவர்கள் தம்மை பாஸ்காவிற்கு ஆயத்தம் செய்யும்விதமாக இத்தவக்கால முறை அறிமுகப்படுத்தப்பட்டது. வெள்ளிகிழமை உபவாசமிருந்து செபம், தபங்கள் மூலம் தம்மை ஆயத்தப்படுத்தி உயிர்ப்பு விழாவினை அர்த்தமுள்ள விதத்தில் கொண்டாட இத் தவக்காலமானது பெரும் துணையானது. எது எப்படி இருப்பினும் ஆரம்ப கால கிறிஸ்தவர்களின் விசுவாசமும் அர்ப்பணிப்பும் எமக்கு கிடைத்த பெரும் கொடைகளே. கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளை தியானித்து வாழ அழைக்கப்படும் நாம் மறு கிறிஸ்தவர்களாக வாழ அழைக்கப்படுகின்றோம் என்பதை மறக்கலாகாது.

ஆகவே, இறைவனின் பேரிரக்கத்தைப் பெற்று பாவத்தழையிலிருந்து விடுதலைபெற ஏதுவான இவ்வருளின் காலமான தவக்காலத்தை கருத்தாக கடப்போம். மனந்திரும்பும் இறையாசீர் நிறைந்த இக்காலத்தை முறையாகப் பயன்படுத்துவோம். நாம் படைக்கப்பட்டதன் நோக்கத்தை தெளிவாக அறிந்துகொள்வோம். இறைசாயலும் அவரது உயிர் மூச்சையும் கொண்டு படைப்புக்களின் சிகரமாக படைக்கப்பட்டதன் நோக்கத்திற்கேற்ப வாழ முற்படுவோம். இறைமகனாம் கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு தூய்மையடைந்த புதிய தேர்ந்தெடுக்கப்பட்ட இனமாக வாழ இத்தவக்காலத்தை பயன்படுத்துவோம். தூய ஆவியின் துணையோடு இயேசுவிற்குள் இறை தந்தையின் மகிமைக்காக வாழ்ந்து மீட்படைந்த மக்களாக, மகிழ்ந்திருப்போம்.

அருட்சகோ. இ. யோகா scjm.
இரத்தினபுரி.

# இளையோர் திறன் உயர....



சென்ற இதழ் தொடர்ச்சி ...............

“அபாரமான சாதனைகளை நிகழ்த்துவதில் ஆழமான ஈடுபாடு கொள்ளுங்கள். உடனே கிடைக்கும் செயற்கையான மகிழ்ச்சியை துரத்தி அலையாதீர்கள். கால எல்லையைத் தவிர வேறு எந்த விதத்திலும் ஒருவரின் அறிவாற்றலை அபகரிக்க இயலாது” என்கிறார் அப்துல் கலாம்.

“உலகம் முழுவதையும் வென்று விட்டேன்” என்று வெற்றிக் களிப்பில் நின்ற அலெ~க்சாண்டர் தனக்கு முன்வந்த வெற்றியை இப்படித்தான் அறிக்கையிட்டார். “ பிரான்ஸ் தேசத்~தின் மகுடம் கீழே கிடந்தது. அதை என் வாளால் எடுத்துக் கொண்டேன்” என்று. இது அலெ~க்சாண்டர் தன் மீதும் தன் படை மீதும் கொண்டிருந்த மதிப்பின் வெளிப்பாடுகள்.

எல்லாமே வெற்றியாக அமைந்து விட்டது எனில் அந்த வெற்றியைப் பெற்றவன் அதிஸ்ட~சாலியாக கருதப்படுவான். அடுக்கடுக்கான தோல்விகளின் சவால்களுக்கிடையே குறிப்பிட்ட சில வெற்றிகளை பெற்றாலும் அவன் திறமைசாலியாக உச்சிமுகரப்படுவான். சவால்களை சா~தனைகளாக்கி இலக்கு நோக்கி நகர்வோம். நம் இதயம் இயங்கும் வரை............

## 09. சவாலின் அறிவு

தன் மகளுக்குத் திருமணம் செய்ய முடிவெடுத்த ஒருவர் போட்டி ஒன்றை அறிவித்தார். உலகத்திலேயே அதிக இனிப்பான ஒரு பொருளையும் அதிக கசப்பான ஒரு பொருளையும் கொண்டு வருபவருக்கு தன் மகளை திருமணம் செய்து தருவதாக அறிவித்தார். பல்வேறு பொ~ருட்களோடு பலர் வந்து நின்றனர். அவர்களுக்கிடையே எவ்வித ஆரவாரமும் இல்லாமல் சி~றுபெட்டி ஒன்றுடன் நிற்கும் இளைஞனைக் கண்டார் அந்தப் பெரியவர். அவனிடம் சென்று உலகத்திலேயே அதிக இனிப்பான பொருள் எது எனக் கேட்க அவன் அந்தப் பெட்டியைக் காட்டினான். அதிக கசப்பான பொருள் எது எனக் கேட்க அதற்கும் அவன் அந்தப் பெட்டியை~யே காட்டினான். ஆச்சரியத்தோடு அவர் அந்தப் பெட்டியைத் திறந்தார். அதற்குள் மனித நாக்கு ஒன்றுடைய படம் இருந்தது.

நாக்கு என்பது தீயைப் போன்றது. எப்போதும் அதில் கவனம் அதிகமாய் இருத்தல் வேண்டும். மனித படைப்பில் அவனுக்கு மிகப்பெரிய சவாலாக இருப்பது அவனது நாக்கே. காலச்சூழல், இடச்சூழல் இவற்றை ஆராய்ந்து நம்முடைய நாக்கை உலவ விடுதல் அவசிய~மானதாகின்றது. நமக்குள்ளே ஒட்டியிருக்கும் மனத்தைச் சரியாக நெறியாள்கை செய்வது சொல்லே ஆகும். காரணம், மனிதனுக்கு உள்ள பெரிய சவால் அவனது நாவே.

மனிதச் சமூகத்தை மானுடவியலாளர் இரண்டாகப் பகுக்கின்றனர். ஒருவர் உயர்ந்த மனிதர்கள் (The Great Man) மற்றொருவர் மீமனிதர்கள் (The Superman) ஆனால் இரண்டு பேருமே சமூகத்தின் இருண்ட பக்ககங்களில் ஒளி பாய்ச்சும் திறன் படைத்தவர்கள். சமூக அழுக்குகளால் ஏற்பட்ட சவால்களுக்கெதிராக அறிவாயுதத்தால் சாட்டையெடுக்க துணிந்து வென்றவர்கள்.

தொடரும்..................
நன்றி ~ விவிலிய விருந்து

# ஆழ்ந்த அனுதாபங்கள்

அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்சகோதரர் அமிர்தராஜ் அவர்களின் தாய் திருமதி செபஸ்ரியான் இயேசுநாயகி குரூஸ் அவர்கள் இறைவனடி சேர்ந்து விட்டார். இவர் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்தவர் ஆவார்.

அன்னாரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற திருமலைத் தீபம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கின்றது.

# ஞானப் பெற்றோர்



கடவுள் தந்த கொடைகளில் ஞானம் முதன்மை பெற்றதே
ஞானம் நிறைந்த மனிதராய்
வாழ்வில் வழி நடத்திட
ஞானப் பெற்றோர் எம் வாழ்க்கையில்
ஞான ஒளி ஏற்றுவார்
ஞானம் நிறைந்த பெற்றோர்கள்
நம் நாட்டில் இருந்திட்ட போதும்
வெளிநாட்டு மோகத்தில் திளைத்திட்ட
சில பெற்றோர்
பெயருக்கு ஞானப்பெற்றோராய் பிள்ளைகட்கு தெரிவு செய்தனரே
திருமுழுக்கில் கண்ட ஞானப்பெற்றோரை
அதன் பின் காணா குழந்தைகள்
திருமணம் வரையிலும் காணாமல் ஏக்கமுடன் வாழ்கின்றனர்.
பிறந்த தின திருப்பலி போல் திருமுழுக்குத் திருப்பலியும்
நிறைவேற்ற இவ்வாண்டில் முடிவு செய்வோம்
திருச்சபையில் அங்கத்துவம் தந்த இந்நன்நாளை
தினம் தோறும் நினைவு கூர்ந்து
ஞானத்தில் வளர்த்திடும் ஞானப் பெற்றோராய்
ஞானமதில் மிளிர்ந்திடுவோம்.

ஆக்கம் : மூதூர் பங்கு மறையாசிரியர்கள்

# அறிவித்தல்

## பிரத்தியேக வகுப்பு (TUTION CLASS) - 2017

01.01.2018 முதல் ஞாயிற்றுக்கிழமையும், போயா தினத்திலும் காலை முதல் பி.ப 01.00 மணி வரையும் பிரத்தியேக வகுப்புக்கள் நடாத்துவதற்கு தடைசெய்யப்பட்டுள்ளது என்பதை கிழக்கு மாகாண ஆளுனர் சுற்றுநிருபம் ஒன்றை அனுப்பியுள்ளார். இதை மீறும் பிரத்தியேக நிலையங்களுக்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

ஆளுனர்,
கிழக்கு மாகாணம்,
மாகாண கல்வி அமைச்சு,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பியம்




## அன்பியத்தின் நோக்கங்கள்

உயிர்த்த இயேசுவின் பிரசன்னத்தை அனுபவிப்பது.



குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும் இறைவார்த்தையால் தூண்டப்பெறுவது.



இறைவார்த்தையின் ஆழத்திற்குள் நம்மையும் பிறரையும் கொண்டு செல்வது



ஒருவர் ஒருவருடன் இறை அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதால் அவர்களது விசுவாசத்தை ஆழப்படுத்துவது.



குழுவுக்குள்ளே ஒருவர் ஒருவரை நம்பி ஏற்றுக் கொள்வது.



இக்குழுவின் செயல்முறைகளைத் திட்டமிட ஒரு செபச் சூழ்நிலையை உருவாக்குவது.



நன்றி - தோழன்



# தூய மாற்கு மாற்கு நற்செய்தி ஓர் அறிமுகம்




### நூலின் காலம்

எந்த ஆண்டு இந்த நூல் எழுதப்பட்டது என்று தெளிவாகக் கூற முடியாது. பேதுரு உயிரோடு இருக்கும் போது எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று அலெக்சாந்திரியா கிளமெந்து கூறுகிறார். லூக்கா தனது நற்செய்தியில் மாற்கு நற்செய்தியைக் கையாளுவதாலும் கி.பி. 63க்கு முன்பே உருவாகியிருக்க வேண்டும் என்ற கருத்து நிலவியது.

பல திருச்சபை தந்தையர்கள், பப்பியாஸ், இரேனியுஸ் போன்றோர் கருத்துப்படி, பேதுரு இறந்த பின்பே (கி.பி. 64 ~66) இந்நூல் எழுதப்பட்டிருக்க வேண்டும். எருசலேம் ஆலயம் 70இல் இடிக்கப்பட்டது. இந்த எருசலேம் ஆலய அழிவு பற்றிய செய்தி இல்லாததாலும் கி.பி. 65~70க்குள் தான் இந்நற்செய்தி எழுதப்பட்டு இருக்க வேண்டும் என ஆய்வாளர்கள் ஒருமனதாய் ஏற்றுக்கொள்கிறார்கள்.

### நூல் யாருக்காக?

இந்நற்செய்தி பாலஸ்தீனுக்கு வெளியே, கிறிஸ்துவை அறிந்த அவரின் புதிய நெறிப்படி வாழ விரும்பிய பிறஇனத்தாருக்காக எழுதப்பெற்றது என்பது பலரின் கருத்து. இது உண்மையே. கீழ்க்காணும் காரணங்கள் இதை விளக்கம் செய்யும். பிற இனத்தாருக்கு நற்செய்தி முழங்குவதே இதன் முக்கிய நோக்கமாக உள்ளது (7:27, 10:12)

மாற்கு நற்செய்தியின் அரமேயச் சொற்களின் ஆதிக்கம் அதிகம். அவைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. (3:17, 5:4, 18:11, 34, 9:43, 15:23, 34, 42) யூதப் பழக்க வழக்கங்களான உணவருந்துவதற்கு முன் கைகால் கழுவுதல் (7:34), பாஸ்காச் செம்மறி பலியிடும் வழக்கம் (14:12) போன்றவை கூறப்படுகின்றன. பெத்பகே, பெத்தானியா போன்ற பாலஸ்தீன இடங்களும் (11:1) விளக்கம் பெறுகின்றன.

சட்டங்களும் இறைவாக்கினர்களின் கூற்றும் அதிக அழுத்தம் பெறவில்லை ( 1:2~3, 14: 49), பரிசேயர், சதுசேயர்களுடன் ஏற்பட்ட முரண்பாடுகள் பற்றி அவ்வளவாக கூறப்படவில்லை. மேற்சொன்னவைகளை வைத்து நாம் கணிக்கும் போது, இந்நற்செய்தி பாலஸ்தீனுக்கு வெளியே உரோமை அல்லது சிரியாவில் கிறிஸ்தவர்களாய் மாறிய பிற இனத்தாருக்கு எழுதப் பெற்றது என்பது தெளிவாகிறது.

### நூல் எதற்காக?

ஒவ்வொரு நற்செய்தியாளரும் தங்களுக்கென்று ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை மையமாக வைத்து குறிப்பிட்ட சூழலில் எழுதுகிறார்கள். அவர்களின் (ஆசிரியர்களின்) குறிக்கோளும், வரலாற்று சூழலும் தான் அவர்களின் எழுத்துக்களுக்கு (செய்திகளுக்கு) உயிரோட்டம் தருகின்றன.

இன்னலுற்ற இளம் திருச்சபைக்கு ஊக்கமும், உற்சாகமும் நிறைவான எதிர்நோக்கும் தருவதே இந்நூலின் நோக்கமாகும். இதில் இருந்து மாற்கின் வரலாற்று பின்னணி என்ன என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

கி.பி 60களில் நீரோ அரசன் காலத்தில் இளம் திருச்சபைக்கு இன்னல்கள் ஏராளமாக எழுந்தன. பலர் துன்பத்தைக் கண்டு ஓடியபோது அவர்களைத் தேற்றி ஆறுதல் தந்து, துன்பத்தின் உட்பொருளை விளக்கி. அதை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் தருவதாக, இயேசுவின் வாழ்வையே மையமாக வைத்து எழுதப்பட்டது இந்நற்செய்தி. சிறப்பாக இயேசுவின் பாடுகள் ஒரு முன்மாதிரியாக வைக்கப்படுகிறது. வாழ்வில் துன்பம் ஒரு முடிவல்ல, உயிர்ப்பு உண்டு என்று கூறி ஊக்கம் அளிக்கிறார் (தி.ப 3:36) என்று ' பாடுகளின் பாதை' யாக தம் நற்செய்தியை முன்வைக்கிறார்.

தொடரும்..................

நன்றி ~ விவிலிய விருந்து

சென்ற இதழின் தொடர்ச்சி....

# விவிலியத்தில் குடும்பம்

ஆதிப் பெற்றோர் ஆண்டவர் தம் ஆட்சிக்கு உட்பட்டு வாழ்வார்களா? இல்லை அவர்கள் தம் இச்சைக்கு ஆட்பட்டு வீழ்வார்களா இதுதான் இறைவன் மானுடத்தின் முதல் குடும்பத்திற்கு விடுத்த சவால். இந்தச் சவாலை சமாளிக்கவில்லை அவர்கள். அவர் இட்டிருந்த கட்டளையை குடும்பமாகச் சேர்ந்து மீறினர். (தொ.நூ: 3: 6) அவர் விடுத்திருந்த வரம்பைக் கடந்தனர். அதனால் அவர் அவர்களோடு கொண்டிருந்த உறவை முறித்தனர். விளைவு,

- ❖ தத்தம் உள்ளத்தில் வெட்கம், அச்சம் எனும் பல குளறுபடிகள் (தொ.நூ 2: 25)
- ❖ தங்களுக்கிடையே குழப்பத்தைத் தரும் குற்றச் சாட்டுக்கள். (தொ.நூ 2 : 23)
- ❖ இறைவனோடு கொண்டிருந்த உறவின் நெருக்கத்திலே விரிசல் (தொ.நூ 3:8)
- ❖ இயற்கைச் சூழலிலே பல இடர்பாடுகள். (தொ.நூ 1: 25)

அதுமட்டுமன்று, உணவுக்காக கடின உழைப்பு (தொ.நூ 3:19), வேதனை மிகுந்த பிள்ளைப்பேறு (தொ.நூ 3:16), சோதனை நிறைந்த வாழ்வு முறை, முரண்பாடுகள் அடங்கிய உணர்வு (தொ.நூ 3:16), இன்பவனத்திலிருந்துவெளி நீக்கம் (தொ.நூ 3:24), நெற்றி வியர்வை நிலத்தில் விழும் தளர்வு நிலை (தொ.நூ 3: 19), மீண்டும் இன்ப வனத்துக்குள் நுழைந்து விடாதவாறு காவல் தூதரின் கட்டுப்பாடு (தொ.நூ 3:24)

# பெற்றோரின் பாவம் பிள்ளைகளைச் சாரும்




இவ்வாறு முதல் பெற்றோர் செய்த பாவத்தின் விளைவு சொல்லொண்ணாத் தீமைகள். ஒருபக்கம் இயற்பொருள்சார் தீமைகள் (Physical Evil) மற்றொரு பக்கமோ அறநெறிசார் தீமைகள் (Moral Evil) இயற்பொருள்சார் தீமையை தமது பாவத்திற்கு தண்டனையாக ஏற்று மீண்டும் இறை உறவை புதுப்பிக்க முனைந்திருந்தால் இறை இரக்கம் இன்னும் பன்மடங்கு பயனளித்திருக்கும். ஆனால் அதை விடுத்து அடுத்து வந்த தலைமுறையும் இறைஉறவை முறித்துக் கொள்ள முனைந்து விட்டால் அங்கே அறநெறிசார் தீமை பெருகிவிடும் எனும் ஆபத்து உள்ளது. அதன் விளைவாகவே இன்னும் பல அவலங்கள் இந்த அவனியிலே உதித்து விடுகின்றன. இறைவனின் திருமுன்னின்று விலக விலக மானுடக் குடும்பங்கள் ஒவ்வொன்றும் இன்னும் பல பல இன்னல்களை எதிர்கொள்ள நேரிட்டது. அதற்கு மாறாக இறைதிருமுன் தன்னை உணர்ந்து தம் சொல். சிந்தனை, செயல் அனைத்தையும் இறை உறவோடு ஒருங்கிணைத்து வாழ்ந்தால் உயர்வு நிச்சயம் எனும் உயர்ந்த இலட்சியத்தை முன்வைக்கிறது ஆதாம் ஏவாளுக்குப் பிறந்த ஆபேல். காயீன் கதை.

தொடரும் .............

நன்றி - விவிலிய விருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தமிழ்த் திருப்பலிப் புத்தகத்தில் திருத்தங்கள்

உரோமன் திருவழிபாட்டுத் தமிழ்த் திருப்பலிப் புத்தகத்தில் மீளவும் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத் திருத்தங்களோடு புதிய திருப்பலிப் புத்தகம் இம்மாதம் இறுதிப் பகுதியில் வெளியிடப்பட்டு திருப்பலியில் பயன்படுத்தப்படும். கத்தோலிக்க ஆயர் பேரவையின் முயற்சியினால் புதிய திருப்பலிப் புத்தகம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இங்கு உரோமை வத்திக்கான் திரு அவையின் திருவழிபாட்டுத் திருப்பேராயத்தினதும், மற்றும் திருவழிபாட்டு, அருளடையாளங்களின் ஒழுங்குமுறைப் பேராயமும் ஒப்புதலும், அனுமதியும் வழங்கியுள்ளன.

(ஆதாரம்: தமிழ் ஆன்மீகப் பணியகம், யெர்மனி.)


## அருட்பணி.ஜெறோ செல்வநாயகம் அடிகளார் அதிபர் பணியிலிருந்து ஓய்வு.



கடந்த பத்து வருடங்களாக புனித பத்திரிசியார் கல்லூரியின் 23வது அதிபராக அரும்பணியாற்றிய அருட்பணி. ஜெறோ செல்வநாயம், இன்று (25.01.2018) தனது 60வது அகவையில் அதிபர் பணியிலிருந்து ஓய்வுபெறுகின்றார். இவர் கரம்பொன் மண்ணில் பிறந்து 1985ஆம் ஆண்டில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு, யாழ். மரியன்னை பேராலயம், வட்டக்கச்சி, கரவெட்டி ஆகிய பங்குகளில் பணியாற்றி, 1989இல் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராக தனது பணியை ஆரம்பித்தார்.

இவர் இப்பணியில் மேற்படிப்புகள் பலவற்றை மேற்கொண்டு, 1997இல் இலண்டன் பல்கலைக் கழகத்தில் கல்வி முதுமாணிப் பட்டத்தைப் பெற்று தன் புலமையை விருத்திசெய்து 29 வருடங்களாக ஆசிரியர் பணியாற்றியுள்ளார். இவர் 2008இல் புனித பத்திரிசியார் கல்லூரியில் அதிபராக பணியேற்று 10 வருடங்கள் அதிபராக பணிபுரிந்து கல்விப்பணியில் மகத்தான சேவைகளை ஆற்றியுள்ளார்.

(ஆதாரம்: தமிழ் ஆன்மீகப் பணியகம், யெர்மனி.)



## சமூகத் தொடர்பு உலக நாள் அருட்பணி. விகனோ பேட்டி

பொய்ச் செய்திகளை அழிப்பதற்கு தனிப்பட்டவர்களுக்கும், நிறுவனங்களுக்கும் இடையே புது வழிகளில் கூட்டுறவு முயற்சிகள் தேவை என்று திருப்பீட சமூகத்தொடர்பு செயலகத்தின் தலைவர் அருட்பணி. தாரியோ எதொவார்தோ விகனோ (Dario Edoardo Viganò) அவர்கள் வத்திக்கான் வானொலிக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.சனவரி 24, புதனன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 52வது சமூகத் தொடர்பு உலக நாளுக்கென வழங்கியுள்ள செய்தியைக் குறித்துப் பேட்டியளித்த அருட்பணி. விகனோ அவர்கள், திருத்தந்தையின் செய்தி விவிலியத்தை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். “தங்களுக்குள்ளே பொய்யைப் பேசியும், தங்களைச் சுற்றி பொய்யைக் கேட்டும் வாழ்வோர், விரையில் உண்மையின்மீதும், தங்கள்மீதும் மதிப்பை இழந்து, அடுத்தவர்மீதும் மதிப்பை இழந்துவிடுவர்” என்று, இரஷ்ய எழுத்தாளர் Dostoevsky அவர்கள் கூறியுள்ள கூற்றை திருத்தந்தை தன் செய்தியில் மேற்கோளாகப் பயன்படுத்தியுள்ளதை அருட்பணி. விகனோ அவர்கள் தன் பேட்டியில் சிறப்பாகக் குறிப்பிட்டார். 1967ஆம் ஆண்டு அருளாளர் ஆறாம் பவுல் அவர்களால் உருவாக்கப்பட்ட சமூகத் தொடர்பு உலக நாள், ஒவ்வோர் ஆண்டும், தூய ஆவியாரின் வருகைப் பெருவிழாவான பெந்தக்கோஸ்து திருவிழாவுக்கு முந்தைய ஞாயிறன்று திரு அவையில் சிறப்பிக்கப்படுகிறது. இவ்வாண்டு மே மாதம் 13ம் திகதி, இந்த சமூகத் தொடர்பு உலக நாள் திரு அவையில் 52வது முறையாகச் சிறப்பிக்கப்படவிருக்கிறது.

(ஆதாரம்: வத்திக்கான் வானொலி.)

## திருகோணமலை மறைவமாட்ட மூதூர் வேதத்தீவு எனும் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் புனித ஜோசேவ் வாஸ் ஆலய திருவிழா.



திருகோணமலை மறைமாவட்ட மூதூர் வேதத்தீவு எனும் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுவரும் புனித ஜோசேவ் வாஸ் ஆலயத் திருவிழா 16.01.2018 செவ்வாய்கிழமை பி. ப. 4:00 மணிக்கு இடம்பெற்றது. திருநாள் திருப்பலி திருகோண~மலை மறைமாவட்ட ஆயரான அதி. வணக்கத்திற்குரிய கலாநிதி கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. இவ்விழாவினை மூதூர் பங்குத்தந்தை அருட்பணி. அலெக்ஸ் செல்லையா அவர்கள் ஒழுங்கு செய்திருந்தார். இத்திருத்தலமானது மூதூர் நீர்தாங்கி (Water Tank) தரிப்பிடத்திலிருந்து சாபி நகர் பகுதியினூடாக சுமார் 2 கி. மீற்றர் தொலைவில் நெல் வயல்களுக்கு மத்தியில் அமையப்பெற்றுள்ளது.மீள் குடியேற்றக் கிராம~மான இப்பகுதியில் தற்போது மூன்று குடும்பங்கள் மட்டுமே குடியேறியுள்ள போதிலும் வயல் வெளிகளினூடாக சுமார் 1.75 கி. மீற்றர் தூரத்திற்கு மின் கம்பங்கள் நடப்பட்டு மின் விநி~யோகம் வழங்கப்பட்டுள்ளதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. வழியில் சிற்றாறு ஒன்றையும் கடந்து செல்லவேண்டும். அதற்கு மிதக்கும் பாதை சேவையிலுள்ளது. அதற்கு மேலதிகமாக திருத்தலத்தை இலகுவாக சென்றடைவதற்கு ஏதுவாக கடற்படையினர் அப்பகுதியில் தற்காலிக மிதக்கும் பாதை ஒன்றையும் அமைத்திருந்தனர். அதைக் கடந்து சில மீற்றர் தூரம் நடந்து செல்லக்கூடிய பாதை உள்ளது. நீர்தாங்கி தரிப்பிடத்திலிருந்து ஆலயம் சென்று திரும்புவதற்கான போக்குவரத்து வசதிகள் மூதூர் புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை அவர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. திருமலை மறைமாவட்டத்தில் புனித ஜோசேவ் வாஸ் அடிகளாருக்கு அர்ப்பணிக்கப்பட்ட முதலாவது திருத்தலம் இது என்பது குறிப்பிடத்தக்கது.



## கிறிஸ்தவ ஒன்றிப்பு வார நிறைவில் திருத்தந்தை

மனித மாண்பைக் குறைத்து மதிப்பிடும் ஆபத்தை எதிர்கொள்ளும் அதேவேளை, பாவம், அச்சம், மற்றும் கவலையிலிருந்து, நம் ஒவ்வொரு நாள் வாழ்வையும் அன்புடன் காப்பாற்றும் இறைவனின் கனிவை, கிறிஸ்தவர்கள் அனுபவிக்கின்றனர் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார். சனவரி 25, வியாழன் மாலை 5:30 மணிக்கு, உரோம் நகரின் புறச்சுவருக்கருகே அமைந்துள்ள புனித பவுல் பசிலிக்காவில், கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்தின் நிறைவாக மாலை வழிபாட்டை தலைமையேற்று நிறைவேற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இஸ்ரயேல் மக்கள், எகிப்திலிருந்து தப்பித்துவந்த அனுபவங்கள் பற்றி, மறையுரையில் பகிர்ந்து கொண்டார். நைல் நதித் தண்ணீரிலிருந்து குழந்தையாகக் காப்பாற்றப்பட்ட மோசே அவர்களால் இஸ்ரயேல் மக்கள் வழிநடத்தப்பட்டபோது, அம்மக்களின் பகைவர்கள், செங்கடலில் அழிந்தனர் என்றுரைத்த திருத்தந்தை, அனைத்துக் கிறிஸ்தவர்களும் திருமுழுக்குத் தண்ணீர் வழியாகக் கடந்து வருகின்றனர் என்று கூறினார். திருமுழுக்கு அருளடையாளத்தின் அருள், நம் பகைவர்கள், பாவம் மற்றும் மரணத்தை அழிக்கின்றது என்றும், இந்த அடிப்படை அனுபவத்தை, கிறிஸ்தவர்கள் அனைவரும் பகிர்ந்துகொள்கின்றோம் என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். ஏனைய மரபுக் கிறிஸ்தவர்களின் திருமுழுக்கை ஏற்பது குறித்துப் பேசிய திருத்தந்தை, அவர்களும் மன்னிப்புப் பெற்றுள்ளவர்கள், அவர்களிடமும் இறையருள் இயங்குகின்றது என்றும், வேறுபாடுகள் நம்மைப் பிரித்தாலும் நாம் எல்லாரும் ஒரே வானகத் தந்தையால் மீட்கப்பட்டவர்கள் என்பதை ஏற்கிறோம் என்றும் கூறினார். இயேசுவின் பெயரால் கிறிஸ்தவர்கள் துன்புறுவதைக் குறிப்பிட்டு, ஆன்மீக வாழ்வில் நாம் வளர்வது பல பல நேரங்களில் கடினமாக உள்ளது என்றுரைத்த திருத்தந்தை, போர்கள் மற்றும் பல்வேறு துன்பச் சூழல்களுக்கு அஞ்சி நாடுகளைவிட்டு வெளியேறும் கிறிஸ்தவர்கள், மனித மாண்பைக் குறைத்து மதிப்பிடும் சவால்களை எதிர்கொள்கின்றனர் என்றும் மறையுரையில் கூறினார். மேலும், மிலான் புறநகர்ப் பகுதியில் இவ்வியாழனன்று இடம்பெற்ற இரயில் விபத்தில் பலியானவர்கள் மற்றும் காயமுற்றவர்கள் குடும்பங்களுக்கு திருத்தந்தை தன் செபங்களையும் ஒருமைப்பாட்டுணர்வையும் தெரிவித்துள்ளார். திருத்தந்தையின் பெயரில், திருப்பீடச் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்கள், மிலான் உயர்மறைமாவட்ட பேராயர் Mario Delpini அவர்களுக்குத் திருத்தந்தையின் செபங்களைத் தெரிவிக்கும் தந்திச் செய்தியை அனுப்பியுள்ளார். Pioltello இரயில் நிலையத்தில், பல இரயில் பெட்டிகள் தடம்புரண்டதில், சிலர் இறந்துள்ளனர் மற்றும் பலர் காயமுற்றுள்ளனர்.

(ஆதாரம்: வத்திக்கான் வானொலி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னிப்பு



தற்போது ஆரம்பித்துள்ள தவக்காலத்தைச் சிறந்த முறையில் சகலரும் அனுசரித்து நல்லபலன் அடைய எல்லாம் வல்ல இறைவன் சகல ஆசீரையும் வழங்குவார் என்ற நம்பிக்கையோடு கால~டியைப் பதிப்போம். இந்த தவக்காலத்தின் போது ஒவ்வொரு முறையும் எவ்வளவோ அறிவுரைக~ளைக் கேட்கிறோம். தீர்மானங்கள், ஒறுத்தல்கள், பாவமன்னிப்புக்கள் எத்தனை எத்தனையோ தியானங்களை மேற்கொள்கிறோம் தவக்காலமும் முடிய சிறிது நாட்கள் நல்ல கிறிஸ்தவனாக இருப்போம் படிப்படியாக அவைகள் மறைந்து பழைய நிலைக்குத் தள்ளப்படுகிறோம் ஏன் இந்த தடுமாற்றம் திடமான விசுவாசம் இல்லை கற்பாரில் விழுந்த விதைகளாகி விடுகின்றோம் எமது குடும்பத்தில் ஏனைய குடும்பங்களுடன் பங்குகளில் பங்குத்தந்தையருடன் எவ்வளவோ முரன்பாடுகளைக் கொண்கிறோம். அந்தந்த முரண்பாடுகளைத் தீர்க்க மன்னிக்க மறக்கஏன் முடியாதுள்ளது. ஆண்டவரிடம் எமக்கேற்ற சக்தியைத் தாரும் பொறுமையைக் கடைப்பிடித்து மற்றவரை மன்னிக்கும் சுபாவத்தை எமது மனதில் விதைத்திடும் இயேசுவே

மன்னிப்பு மன்னிப்பு மன்னிப்பு தேவா!
மன்னிப்பு மன்னிப்பு மன்னிப்பு நாதா!
மன்னிப்புமன்னிப்புமன்னிப்புநாதா!

மன்னிப்பு மனிதப் பண்புகளில் மிகச் சிறந்தது. இதன் பெறுமதியை மதிப்பிட இயலாது . இந்த மன்னிப்பு உதட்டிலிருந்து வருவதை விட உள்ளத்தில் இருந்து வருவதே சிறந்தது. தவறு செய்பவன் தனது தவறை உணர்ந்து மன்னிப்பு கேட்கும் பட்சத்தில் மன்னிப்பு வழங்க வேண்டும். வழங்காதவன் இறைவனால் புறக்கணிக்கப்படுகின்றான். இதனால் மன்னிப்புக்கு எவ்வளவு மகிமை உள்ளது ஒருவன் தவறு செய்தால் ஏழு தடவை மன்னிக்கலாம் என விவிலியத்தில் உள்ளது எனக் கூறியிருக்கிறார் என ஒருவர் கேட்க இயேசு எழுபது தடவை ஏழு தரம் மன்னிக்கலாம் என கூறியிருக்கிறார் எனத் தெரிவித்துள்ளனர்.


இதனால் என்ன புலப்படுவது எனப் பார்த்தால் மன்னிப்பிற்கு அளவே இல்லை எனவும் மன்னிப்பிற்கு வயதெல்லை இல்லை. எவரும் தவறு செய்யாதவர்களில்லை ஏதோ ஒரு வகையில் சிறு தவறேனும் செய்தவர்களாயிருப்பர் அவர்கள் தவறை உணர்ந்து மன்னிப்பு கேட்கும் பட்சத்தில் திருந்திய மனிதராகின்றனர்.

பழைய ஏற்பாட்டில் இயேசு ஊதாரிப்பிள்ளையின் உவமையில் அப்பிள்ளை தந்தையை பகைத்து அவரது சொத்தில் தனது பங்கை எடுத்துச்சென்று ஊதாரித்தனமாக செலவளித்து இறுதியில் உணவின்றி மிகவும் கஸ்டப்பட்டு பன்றிக்கு கொடுக்கும் உணவை உண்டான். பின் வேதனைப்பட்டு இறுதியில் தனது தந்தையிடமே திரும்பி திருந்தி வந்தான் தந்தையும் அனைத்தையும் மறந்து மகனைக் கட்டியணைத்து ஆரத்தழுவி புத்தாடைகள் நகைகள் அணிவித்து விருந்திற்கு ஏற்பாடு செய்து மகிழ்வித்தார். எவ்வளவு பெருந்தன்மையுடன் மறந்து மன்னித்து அவரது மகனை ஏற்றுக்கொண்டார் இந்த மன்னிப்பின் பெறுமதியை எவரும் மதிப்பிட முடியாது. இது போன்ற செயலை நாமும் புரிய நல்ல மனமாற்றத்தை இயேசு தருவார் என்று நம்பிக்கையுடன் கூறும் அன்பன்

ச.அந்தோனிப்பிள்ளை

## இத்தவக்காலத்தில் உபவாசம் இருக்க விரும்புகின்றாயா?

### ( நமது திருத்தந்தை பிரான்சிஸ் கூறும் வழிமுறைகள் )





- ✝ பிறரை நோகடிக்கும் வார்த்தைகளை உபவாசித்து அன்பான வார்த்தைகளைப் பேசு.
- ✝ சோகமான நிலையை உபவாசித்து நன்றியுள்ளத்துடன் மகிழ்ச்சியோடு இருக்கப் பழகு
- ✝ கோபத்தை உபவாசித்து பொறுமையைக் கற்றுக் கொள்
- ✝ அவநம்பிக்கை கொள்வதை உபவாசித்து நம்பிக்கையில் நிலைத்திரு
- ✝ வீண் கவலைகளை உபவாசித்து இயேசுவில் நம்பிக்கை வை
- ✝ குறை கூறுவதை உபவாசித்து இருப்பதைக் கொண்டு எளிமையாக வாழப் பழகு
- ✝ மன அழுத்தங்களை உபவாசித்து ஜெபத்தில் நிலைத்திரு
- ✝ மனக்கசப்புக்களை உபவாசித்து உள்ளத்தை சந்தோசத்தினால் நிரப்பு
- ✝ சுயநலத்தை உபவாசித்து பிறர்நலனில் அக்கறையாயிரு
- ✝ காழ்ப்புணர்வுகளை (வெறுப்புக்களை) உபவாசித்து சமாதானம் செய்து கொள்
- ✝ அதிகமான வீண்பேச்சை உபவாசித்து அமைதியாயிரு இதனால் நல்லவற்றைக் கேட்டு தியானிக்க முடியும்.

தகவல் : சமூக வலைத்தளம்

## ஜூபிலி மண்டபத்திறப்பு விழா மற்றும் மறைமாவட்ட மேய்ப்புப் பணி மாநாடு

திருகோணமலை மறைமாவட்டத்திற்குரிய ஜூபிலி மண்டபத் (கல்வாரி வீதி) திறப்பு விழா கடந்த ஆண்டு கார்த்திகை மாதம் 18ம் திகதி (2017.11.18) காலை 8.40 மணியளவில் ஆயர் மேதகு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவல் ஆண்டகை அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. திறப்பு விழா நிகழ்வுகளின் பின் மறைமாவட்ட மேய்ப்பு பணி மாநாடு ஆரம்பமானது. மாநாட்டின் முதல் அங்கமாக திருகோணமலை மறை மாவட்டத்தில் குடும்ப ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டதன் முத்தாய்ப்பாக இல்லற வாழ்வில் வைரவிழா~வைக் கடந்த அன்பிற்கினிய குடும்பங்களான திரு.P. அல்பிரட் தேவமணி, திருமதி.A. சிசிலியாம்மா தம்பதிகள் மற்றும் திரு. பிலிப் ஹயிஸ் திருமதி.F. வார்த்து மேரி தம்பதிகள் ஆகியோர் ஆயரினாலும் குருமுதல்வரினாலும் பொன்னாடை அணிவித்து நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். கௌரவிப்பு நிகழ்வுகளை தொடர்ந்து மாநாடு இனிதே நடைபெற்று மதியம் 1.15 மணிக்கு நிறைவுற்றது.

தகவல் : அலை ஓசை கலைத்தொடர்பகம்

புகைப்படம் 12ம் பக்கத்தில்.....

## மறைந்து போனதே .....

| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 04 | 22 |
| 01 | 02 |
| 1934 | 2018 |



அமரர். நீற்றா அருள்வேததாசன் குரூஸ்

முதூரில் பிறந்து வளர்ந்து
பிள்ளைகளோடு
நாட்டை விட்டு
லண்டன் நகரிலே
காலத்தைக் கடத்தியவர்
திருமதி நீற்றா அருள்வேததாசன்
குரூஸ் அவர்கள்
உயர்ந்த மன உணர்வால்
சிறந்திருந்தவர்
தன்னால் முடிந்ததை
மற்றவருக்கு
செய்து மகிழ்ந்தவர்

காலம் நெருங்கி வந்தபோது
கண்மூடி மறைந்து விட்டார்.
ஈடுசெய்ய முடியாத
இழப்பைக் காணும்
குடும்ப அங்கத்தவருக்கு
எங்கள்
ஆழ்ந்த அனுதாபம்
அவரின் ஆன்மா
அமைதியடைய
வேண்டுகின்றோம்.

ஆசிரியர்
திருமலைத்தீபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைக்கல்வி கற்போம் – 28

**01. அன்பியத்தின் ஏழு படி நிலைகளின் நோக்கம்?**

உயிர்த்த இயேசுவை அனுபவித்து இறைவார்த்தையில் ஊன்றப்பட்டு இறை அனுபவத்தைப் பகிர்ந்து நாம் வாழும் சமூகத்தில் நம்பிக்கையை வளர்த்து பல வழிகளிலும் ஒருவர் ஒருவருக்குள் வாழ்ந்து செபிப்பதிலும் அறச்செயல்களிலும் நிலைத்திருந்து இயேசுவிற்கு சாட்சியம் கூறுவதே.

**02. தூய மாற்குவின் சின்னம் ( அடையாளம் என்ன) ?**

மனித முகம்

**03. பாவமன்னிப்பு அடைய மனம் மாறி திருமுழுக்கு பெறுங்கள் என பாலைநிலத்தில் பறைசாற்றியவர் யார்?**

திருமுழுக்கு யோவான்

**04. திருமுழுக்கு யோவானைப் பற்றி 03 வசனங்கள் எழுதுக?**

ஒட்டக முடியை ஆடையாக அணிந்தார்
தோல் கச்சையை இடையில் கட்டியிருந்தார்
வெட்டுக்கிளியும் காட்டுத்தேனும் உண்டு வந்தார்.

**05. அன்பியத்தின் படிமுறைகள் 07 உள்ளன. அவை எவை?**

1. இறைவனின் பிரசன்னத்தையும் உடனிருப்பையும் உணர்தல்.
2. விவிலியத்தை வாசித்தல்.
3. உள்ளத்தை, மனதை தொட்ட இறைவார்த்தையை பிறரோடு பகிர்தல்.
4. இறைவனின் குரலுக்கு செவிமடுத்தல்
5. இறைவார்த்தை பகிர்வு
6. செயற்திட்டம்
7. எல்லோரும் இணைந்து செபித்தல்

**06. திருச்சபை என்ற சொல்லின் பொருள்?**

இறைவனால் அழைத்துக் கட்டப்பட்ட இறைவனின் குழுமம்

**07. இறையாட்சியின் கூறுகள் எவை?**

ஒற்றுமை. சமாதானம், சகோதரத்துவம், சமத்தவம். பிறரன்பு, மன்னிப்பு, ஏற்றதாழ்வற்ற அன்பு, அறச்செயல்கள், விழிப்பு நிலை, நீதியுள்ள சமூகத்தை உருவாக்கல்.

**08. அன்பியங்கள் சிறப்பாக செயற்படுவதற்கு 3 வழிகாட்டும் நட்சத்திரங்கள் எவை?**

1. கிறிஸ்துவை மையப்படுத்தல்.
2. உறவு குழுமத்தைக் கட்டியெழுப்புதல்.
3. கிறிஸ்துவின் நற்செயதியைத் தொடர்ந்து அறிவித்தல்.

**09. புதிய ஏற்பாட்டில் அன்பியத்தை திருச்சபை எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?**

இறைமக்களின் குழுமங்கள் நற்புறவுடன் உறவாடி விசுவாசப் பகிர்வுசெய்து, அப்பம் பிட்கும் கொண்டாட்டத்தில் பங்கெடுத்து சாட்சிகளாக வாழ்வதே.

**10. அன்பிய குழுவாக வாழ இன்றைய தேவை?**

புன்முறுவல், திறமைகளுக்க மதிப்பளித்தல், கடவுளின் குரலைக் கேட்டு செயற்படல், சேர்ந்து செபித்தல், தன்னார்வத்துடன் பணிபுரிதல், சகோதர அன்பை வெளிப்படுத்தல், நன்றி செலுத்துதல், மக்களின் வாழ்வில் ஈடுபடல், அடிக்கடி சந்தித்தல், முழு அர்ப்பணம்,

## தூய மத்தயு நற்செய்தி

பங்குபற்றியவர்கள் : 12 பேர்


**பரிசுக்குரியவர்கள்**



1ம் பரிசு 1000/- ரூபா
மேரி செலின்
இல : 427 அன்புவழிபுரம்
திருகோணமலை.

2ம் பரிசு 750/- ரூபா
அன்ரனி ஜேசுதாசன் கனீசியஸ்
இல : 432, அன்புவழிபுரம்.
திருகோணமலை

3ம் பரிசு 500/- ரூபா
செல்வி. புளோரிடா ஜேசுதாசன்,
இல 37/6, நீதிமன்ற வீதி,
திருகோணமலை



# சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி

## சீமோன் இயேசுவுக்கு உதவி செய்தல்

- **பாலர் முதல் தரம் 5 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.**
- **திருமலைத்தீபத்தில் தரப்படும் படத்திற்கு நிறம் தீட்டுதல் வேண்டும் போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது**
- **1,2,3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்**
- **1ம் பரிசு - 500/= 2ம் பரிசு - 300/= 3ம் பரிசு - 200/=**



பெயர் ..........................
முகவரி ..........................
பங்கு ..........................
தரம் ..........................
**முடிவுத் திகதி 25.03.2018**

# கிறிஸ்மஸ் சிறப்புப் போட்டி – 2017
# போட்டி முடிவுகள்

## தூய யோசேப்வாஸ்

பங்குபற்றியவர்கள் : 19 பேர்
55 வினாக்களில் 54 வினாக்களுக்க மிகச் சரியாக விடையளித்தோர் : 04 பேர்

**இவர்களுக்கான பரிசுகள் 16.01.2018 அன்று மூதூர் வேதத்தீவில் தூய யோசேப்வாஸ் திருவிழா அன்று மூதூர் வேதத்தீவில் பரிசுகள் வழங்கப்பட்டது.**

செல்வி. பி. கொன்சலா
இல : 125, உட்துறைமுக வீதி,
திருகோணமலை

செல்வன். ச. மிதுசன்
இல : 57, தூய அந்தோனியார் வீதி
பாலையூற்று

திருமதி. அன்ரனி யேசுதாசன் மேரி கொலின்
இல : 432 அன்புவழிபுரம்
திருகோணமலை.

செல்வி. ச. ஏஞ்சல் விக்டரின்
இல : 49, தூய அந்தோனியார் வீதி,
பாலையூற்று

## குடும்ப அருட்பணிகள்

பங்குபற்றியவர்கள் : 09 பேர்
சரியாக விடையளித்தோர் : 02 பேர்

பரிசுத்தொகை இருவருக்கும் சமமாக பிர்த்து வழங்கப்படுகின்றது.

1ம் பரிசு 500/- ரூபா
ச.அன்ரனி ஜேசுதாசன்
இல : 432, அன்புவழிபுரம்,
திருகோணமலை.

1ம் பரிசு 500/- ரூபா
த. மேரிசெலின்
இல : 427, அன்புவழிபுரம்,
திருகோணமலை

# பங்குபற்றிய அனைவருக்கும் பாராட்டுக்களும் நன்றிகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைமாவட்ட 125வது ஆண்டை முன்னிட்டு வெளியாகும்......

# மனிதத்தின் பயணம்

சிலுவைப்பாதையின் சிந்தனைகள்





# திருப்பாலத்துவ சபை

## சிறப்புத் திருப்பலி







# மறையாசிரியர் ஒன்றுகூடல்







# ஜூபிலி மண்டப திறப்பு விழா நிகழ்வு








# 01வது நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 1950 | | 2017 |
| 09 | | 03 |
| 23 | | 07 |



## அமரர் மேரி மார்கிறேற்

"உன் பெயரைச் சொல்லி உன்னை அழைத்தேன்
நீ எனக்கு உரியவன்" (எசாயா 43 : 1)

உடலால் எம்மைப் பிரிந்தாலும்
உள்ளத்தாலும், உணர்வுகளாலும்
என்றுமே எம்முடன் வாழ்கிறீர்கள்.
கண்களில் கண்ணீர் முத்துக்களுடன்
கலங்கி நிற்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்,
இல : 1477, அன்புவழிபுரம், முருகன் கோயில் வீதி,
திருகோணமலை

# 40வது வருட திருமண நன்றி நவிலல்




## திரு திருமதி கிறிஸ்ரோபர் அடம்ஸ் பூமணி றெஜினா அடம்ஸ்

நான்கு தசாப்த மணவாழ்வில்
எம் பெற்றோர்கள் நீங்கள்
பிள்ளைகளின் ஒழுக்கத்திலும்
கிறிஸ்தவ மதிப்பீட்டிலும்
நாங்கள் காட்டிய ஒவ்வொரு
வழிகாட்டல்களுக்கும்
எம் மனம் நிறைந்த நன்றிகள்

தகவல்:
மகன் நீகன்
6ம் வட்டாரம், சாம்பல்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவரே இரக்கமாயிரும் ஏனெனில் நாங்கள் பாவம் செய்தோம் (தி.பா 51 : 1-4)